உலகச் சமயங்கள் வரிசை—10

ஹிந்து மதம்:
இதிஹாஸங்கள்

சர்வோதயப் பிரசுராலயம்
தஞ்சாவூர்

முதற் பதிப்பு—செப். '67—2000 விலை ரூ. மூன்று

"HINDUISM II—ITIHASAS" IN TAMIL

Published by
SARVODAYA PRACHURALAYAM,
THANJAVUR (Tamil Nad), *Branch of*
SARVA SEVA SANGH PRAKASHAN,
VARANASI-1.

I Edition, Sep. '67

No. of Copies 2000

Price : Re. One

Kabeer Printing Works, Madras (791)

பதிப்புரை

"ஹிந்து மத"த்தின் இரண்டாம் பாகமான "இதிஹாஸங்கள்" என்ற இது எமது உலகச் சமயங்கள் வரிசையில் பத்தாவது நூலாகும். இதில் இராமாயணம், மகாபாரதம் என்ற இரு பெரு இதிஹாஸங்களும், தத்துவ நூல்களில் ஞானவாசிட்டமும், தரிசனங்களில், பிரம்ம சூத்திரமும் யோக சூத்திரமும் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

இதன் ஹிந்தி மூலத்தை வெளியிட்டுள்ள காசி சர்வ சேவா சங்கப் பிரகாசனத்தாருக்கும், இதன் தொகுப்பாசிரியர் திரு. ஸ்ரீ கிருஷ்ணதத்த பட் அவர்களுக்கும் யாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம்.

தஞ்சை
1—9—67

சர்வோதயப் பிரசுராலயம்

பொருளடக்கம்

முதல் அத்தியாயம்

ஹிந்து மதம்

ப்ராமாண்யபுத்திர்வேதேஷு ஸாதனுனாமனேகதா ।
உபாஸ்யானுமனியமச்சைதத்தர்மஸ்ய லக்ஷணம் ॥

வைதிக தர்மம் எனப்படும் சனாதன தர்மம் அல்லது ஹிந்து மதத்தின் லட்சணங்கள்,

(1) வேதங்களை பிரமாணமாகக் கருதுதல்,

(2) வழிகள் அல்லது சாதனம் ஒன்றேயென்று கொள்ளாது அவை பல உண்டு என்று மதித்தல்,

(3) உபாசனை அல்லது வழிபாட்டின் விஷயத்தில் நிர்பந்தம் எதுவும் இல்லாமை என்பனவாம்.

தர்மமேனம் ஸாமலம்ப்ய விதிபி: ஸம்ஸ்க்ருதஸ்து ய: ।
ச்ருதிஸ்ம்ருதிபுராணோக்தை: க்ரமேணாப்தைரதாபி வா ॥
ஸ்வே ஸ்வே கர்மண்யபிரத: ச்ரத்தாபக்திஸமன்வித:
சாஸ்த்ரோக்தாசாரசீலச்ச ஸ வை ஹிந்து: ஸனாதன: ॥

प्रामाण्यबुद्धिर्वेदेषु साधनानामनेकता ।
उपास्यानामनियमश्चैतद्धर्मस्य लक्षणम् ॥

धर्ममेनं समालम्ब्य विधिभिः संस्कृतस्तु यः ।
श्रुतिस्मृतिपुराणोक्तैः क्रमेणाप्तैरथापि वा ॥
स्वे स्वे कर्मण्यभिरतः श्रद्धाभक्तिसमन्वितः ।
शास्त्रोक्ताचारशीलश्च स वै हिन्दुः सनातनः ॥

எந்த தர்மத்தின்மீது பல ஸம்ஸ்காரங்கள் படிந்திருக்கின்றனவோ, அதை அனுஷ்டிப்பவனாய் எவன் சுருதி ஸ்மிருதி புராணங்கள் ஆகியவை முறையே ஏற்று அனுசரிக்கத் தக்கவை என்று கருதுகிறானோ, பக்தி சிரத்தையுடன் தனக்கு உகந்த கர்மத்தில் ஈடுபட்டிருக்கிறானோ, சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டுள்ள ஆசார அனுஷ்டானங்களைப் பின்பற்றுகிறானோ அவனே ஹிந்து அல்லது சனாதனி ஆவான்.

ஹிந்து மதத்தின் வளர்ச்சி :

சனாதன தர்மம், வைதிக தர்மம் என்றெல்லாம் அழைக்கப்படும் ஹிந்து மதம் தோன்றி வளர்ந்தது 100, 200 ஆண்டுகளுக்கு முன்போ 500, 600 ஆண்டுகளுக்கு முன்னரோ அல்ல; அது தோன்றி குறைந்தது 4, 5 ஆயிரம் ஆண்டுகளாவது ஆகியிருக்கும். இவ்வளவு நீண்ட காலமாய் வளர்ந்துவந்திருப்பதால் அது மிகவும் பரந்து விரிந்திருக்கிறது. உலகில் வழங்கும் எல்லாச் சமயங்களுக்கும் முந்தியதாகும் இது.

ஹிந்து மதத்தை இன்னார் ஸ்தாபித்தார் என்று எவர் பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லமுடியாது. இந்த மதத்தில் விதவிதமான தத்துவங்களும் வழிபாட்டு முறைகளும் வழங்குவது இதனால்தான். இவ்வாறிருந்தும் எந்த ஒன்றுக்கும் இன்னொன்றுக்கும் இதில் விரோதமே இருக்கவில்லை. இதில் நிர்குணமும் நிராகாரமுமான ஈசுவரனும் உபாசிக்கப்படுகிறான்; சகுண சாகார தெய்வமும் வழிபடப்படுகிறது. இதில் அத்வைதமும் இருக்கிறது, துவைதமும் இருக்கிறது, விசிஷ்டாத்வைதமும் உள்ளது. இதில் கடவுளை இருப்பதாக நம்பும் ஆஸ்திகனுக்கும் இடமுண்டு, கடவுளே இல்லை என்று வாதிக்கும் சர்வாகன் என்ற நாஸ்திகனுக்கும் இடமுண்டு. இதில் எல்லோருமே அவரவர் இஷ்டப்படி நடக்க அனுமதிக்கப்படுகிறார்கள். உலகிலுள்ள வேறு எந்த சமயத்

திலும் இவ்வளவு சுதந்திரம் கிடையாது. பெரிய பெரிய வித்துவான்களான ரிஷி முனிவர்கள் பல்லாயிரம் ஆண்டு களுக்கு முன்னிருந்தே இந்த மதத்தை வளர்த்திருக் கிறார்கள்.

மதத்தின் அடிப்படைக் கோட்பாடு :

வேத காலத்திலிருந்து இன்றுவரையிலும் இந்துமதம் பெற்றுவந்துள்ள வளர்ச்சியில் அவ்வப்பொழுது பல மாற்றங்களும் நிகழ்ந்துகொண்டே இருந்திருக்கின்றன. ஆயினும் அதன் கோட்பாடுகள் சில அதற்கு அடிப்படை கள்—ஆதாரங்களென்று கருதப்படுகின்றன. உதாரண மாக,

(1) வேதங்களை ஆதார நூல்களாகக் கருதுதல்,

(2) ஒரே கடவுளை நம்பி அவரை பல்வேறு உருவங் களில் வழிபடுதல்,

(3) வாழ்க்கையில் நீதிவழியினின்று வழுவாது நடப்பதை வற்புறுத்தல்,

(4) வர்ண ஏற்பாட்டையும், ஆச்ரம முறையையும் ஒப்புக்கொண்டு, கர்மம், புனர்ஜன்மம் அல்லது மறு பிறவி, மோட்சம் என்பவைகளை ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றைக் கூறலாம்.

மத நூல்கள் :

ஹிந்துமத சாஸ்திரங்களில் ச்ருதி என்றும் ஸ்மிருதி என்றும் இரண்டு பிரிவுகள் உள்ளன. ‘ ச்ருதி ’ என்பது கேள்வி வழியே, காதால் கேட்டே பெறப்பட்டது. பரமாத்மாவிடமிருந்து ரிஷிகள் தம் காதால் நேரே கேட்டு அறிந்ததாகும் சுருதி. இதில் வேதத்தில் தொடங்கி உபநிடதங்கள் வரையில் எல்லாம் அடங்கும்.

‘ ஸ்மிருதி ’ என்பது நினைவில் வைத்துக் கொள்ளப் பட்டது ஆகும். அதாவது, மனப்பாடம் செய்து நினைவில்

வைத்துக்கொண்டும், அதில் அடங்கியுள்ள விஷயங்கள் குறித்துச் சிந்தித்தும் உருவாக்கப்பட்ட சாஸ்திரம்.

ஸ்மிருதியினுள் ஆறு வேதாங்கங்களும், தர்ம சாஸ்திரமும், இதிகாசங்களும் புராணங்களும், எல்லா நீதி நூல்களும் அடங்கும்.

தர்ம சாஸ்திரம் :

தர்ம சாஸ்திரத்தில் தர்ம சூத்திரம், ஸ்மிருதிகள், கட்டுரைகளாய் அமைந்த நூல்கள் ஆகியவை சேர்ந்தவை.

வேதாங்கங்களில் கல்ப்பத்திற்கு மிகுந்த சிறப் புண்டு. கல்ப்ப சூத்திரங்களில் யாக யக்ஞங்களின் விதி முறைகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. கல்ப்ப சூத்திரத் திற்கு மூன்று பகுதிகள் உள்ளன. அவை சிரௌத சூத்திரம், கிருஹ்ய சூத்திரம், தர்ம சூத்திரம் என்பன.

சிரௌத சூத்திரத்தில் வேதத்தில் விதித்துள்ள யக்ஞங்கள் அல்லது வேள்விகளின் விதிமுறைகள் அடங்கி இருக்கின்றன.

கிருஹ்ய சூத்திரத்தில் ஒருவன் பிறந்தது முதல் இறக் கும் வரையில் செய்யப்படுபவையும், இல்லற வாழ்க்கை யில் பல சந்தர்ப்பங்களிலும் செய்யப்படுபவையுமான கர்மங்களின் விதிமுறைகள் உள்ளன. இதில் பாக யக்ஞ மும் (சமையல் என்ற வேள்வியும்), பஞ்ச மகாயக்ஞங் களும் இடம்பெறும். இவையல்லாமல் ஒவ்வொரு பருவத் திலும் இயற்றப்படவேண்டிய யக்ஞங்களும், சிறந்த பெரி யோரின் நினைவில் செய்யப்படும் சிராத்தமும் பிறவும் இதில் அடங்கும்.

தர்ம சூத்திரங்களிலோ பல்வேறு காலங்களிலும் அனுஷ்டிக்கவேண்டிய சடங்குகள் விவரிக்கப்பட்டிருக் கின்றன.

தர்ம சூத்திரங்களில் முக்கியமானவை ஆபஸ்தம்பர், போதாயனர், கௌதமர், ஹிரண்யகேசி ஆகியோர்

இயற்றியவையாகும். இந்த தர்ம சூத்திரங்களிலிருந்தே பிற்காலத்தில் ஸ்மிருதிகள் உருவாக்கப்பட்டன.

ஸ்மிருதிகள் :

ஸ்மிருதிகள் 18-லிருந்து 56 வரை இருப்பதாகக் கூறப்படுகிறது. மனு, யாக்ஞவல்கியர், அத்திரி, விஷ்ணு, ஹாரீதர், உசனஸர், அங்கிரஸர், யமன், காத்யாயனர், பிருகஸ்பதி, பராசரர், வியாசர், தக்ஷர், கௌதமர், வசிஷ்டர், நாரதர், ப்ருகு, சங்க ஆகியோர் இயற்றிய 18 ஸ்மிருதிகள் கிடைக்கின்றன. இவற்றுள் மனு, யாக்ஞவல்கியர், பராசரர் ஆகியோரது ஸ்மிருதிகள் முக்கியமானவையென்று கருதப்படுகிறது.

'மானவ தர்ம சாஸ்திரம்' எனப்படும் மனுஸ்மிருதி இவையனைத்திலும் பழையதாகும். இதிலுள்ள 12 அத்தியாயங்களில் சமூகம் முழுவதற்கும் தேவையான எல்லா விதிமுறைகளும் அடங்கியிருக்கின்றன. இது பாரதத்தில் மட்டுமன்றி பர்மா, சயாம், ஜாவா முதலிய கீழை நாடுகளிலும் ஆதாரமாகக் கருதப்படும் அளவுக்கு வெளியிலும் பரவியிருக்கிறது.

11-ம் நூற்றாண்டில் யாக்ஞவல்கிய ஸ்மிருதிக்கு விக்ஞானேசுவரர் என்பவர் 'மிதாக்ஷரா' எனப்படும் 'டீகை' (விரிவுரை) எழுதினர். ஹிந்துக்களின் பிரத்தியேகமான சட்டத்திற்கு (Hindu Law) இது ஆதார நூலாக மதிக்கப்பட்டிருக்கிறது.

மதக் கட்டுரைகள் :

ஸ்மிருதிகள் பலராலும் எழுதப்பட்டு மிகவும் அதிகமாய் ஆகிவிட்டபோது பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குப் பிந்திய காலத்தில் இருந்த அரசர்கள் அவைகளுக்கு சுருக்கம் தயாரிக்கும் நோக்கத்தில் பல புதிய நூல்களை உருவாக்கச் செய்தார்கள். இவ்வாறு வரையப்பட்ட நூல்களில் "ஸ்மிருதி கல்பதரு" என்பது மிகவும்

பழையது. இதே வகையைச் சேர்ந்த தொகுப்பு நூல்களில் முக்கியமானவை ஸ்மிருதி சந்திரிகை, சதுர்வர்க சிந்தாமணி, ஸ்மிருதி ரத்னாகரம், தர்ம ரத்னம், நிர்ணயஸிந்து என்பவை ஆகும்.

இதிஹாசம் :

இதிஹாசங்களில் முக்கியமானவை இராமாயணம், மகாபாரதம் என்பவை.

ஆதி கவியென்று கொண்டாடப்படும் வான்மீகி முனிவர் இயற்றிய இராமாயணத்தில் வரும் ஸ்ரீராமன் கதையை அறியாதார் யார்? இராமாயணத்தைப் பற்றி

> சரிதம் ரகுநாதஸ்ய சதகோடிப்ரவிஸ்தரம் ।
> ஏகைகமக்ஷரம் பும்ஸாம் மஹாபாதக நாசனம் ॥

'நூறு கோடி சுலோகங்களில் வரையப்பட்டுள்ள இராமாயணத்தின் ஒவ்வொரு எழுத்தும் நம் பாவங்களைப் போக்கக் கூடியது' என்று சொல்லப்பட்டிருப்பது காரணம் இல்லாமலா?

வான்மீகி ராமாயணத்தை கோஸ்வாமி துளசிதாசர் என்ற மகான் ஹிந்தி மொழியில் தோஹா, சௌபாயி என்ற இருவகை எளிய சந்தங்களில் இயற்றி சாதாரண மக்களும் படித்து அனுபவிக்க வகை செய்தார். அவருக்கு முன்பே தமிழில் கம்ப நாட்டாரும் பிற்காலத்தில் தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய திராவிட மொழிகளில் பல பெரிய கவிஞரும், மராத்தி, குஜராத்தி, வங்காளி முதலிய வடநாட்டு மொழிகளில் மாமேதைகளான கவிஞர்களும் எழுதி இந்திய நாடெங்கிலும் ஸ்ரீ ராமபிரானின் தெய்விக வரலாற்றைப் பரப்பினர்கள்.

चरितं रघुनाथस्य शतकोटिप्रविस्तरम् ।
एकैकमक्षरं पुंसां महापातकनाशनम् ॥

மகாபாரதம் வேத வியாசர் என்ற மகரிஷி இயற்றிய தென்று சொல்லப்படுகிறது. அதில் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் நடந்த பெரும் போரும், அதற்கு முன்னும் பின்னும் நிகழ்ந்தவையும் விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. 18 பருவங்கள் அல்லது பெரும் பாகங்கள் கொண்ட இந்த மாபெரும் நூலில் எத்தனையோ விதமான உபதேசங்கள் அடங்கியிருக்கின்றன.

புராணம்:

'புராணம்' என்ற சொல்லுக்கு பழையது என்று பொருள். மிகவும் பழையவை ஆகையால் இந்த மத நூல்கள் புராணங்கள் எனப்பட்டன. புராணங்களில் மத தத்துவங்கள் கதைகளின் உருவில் மிகவும் எளிதாக்கப்பட்டு சாதாரண மக்களும் புரிந்து கொள்ளுமாறு அளிக்கப்பட்டிருக்கின்றன. மகாபாரதம் இயற்றிய வேத வியாசரேதான் இவைகளையும் புனைந்ததாகக் கூறப்படுகிறது.

முக்கியமான மகாபுராணங்கள் 18. அவையாவன:

(1) பிரம்ம புராணம்
(2) பத்ம புராணம்
(3) விஷ்ணு புராணம்
(4) சிவ புராணம்
(5) பாகவத புராணம்
(6) நாராயண புராணம்
(7) மார்க்கண்டேய புராணம்
(8) அக்னி புராணம்
(9) பவிஷ்ய புராணம்
(10) பிரம்ம வைவர்த்த புராணம்
(11) லிங்க புராணம்
(12) வராஹ புராணம்
(13) கந்த புராணம்
(14) வாமன புராணம்
(15) கூர்ம புராணம்
(16) மத்ஸ்ய புராணம்
(17) கருட புராணம்
(18) பிரம்மாண்ட புராணம்

எல்லாப் புராணங்களின் மூலமாகவும் வேத வியாசர்,

பரோபகார: புண்யாய பாபாய பரபீடனம்

परोपकारः पुण्याय पापाय परपीडनम् ।

'பிறருக்கு உபகாரம் செய்வதனுல் புண்ணியமும், பிறரை வருத்துவதனுல் பாவமும் வரும்' என்ற ஒரே நல்லுரையைத்தான் நமக்கு வழங்கியிருக்கிறுர்.

தரிசன சாஸ்திரம் :

இந்திய தரிசன சாஸ்திரங்களை ஆஸ்திகம், நாஸ்திகம் என்று இருவகையாகப் பிரிக்கலாம். வேதத்தை ஆதாரமாக கொள்ளும் ஆஸ்திக தர்ம சாஸ்திரங்கள் ஆறு. அவை,

(1) நியாயம்	(2) வைசேஷகம்	(3) ஸாங்கியம்
(4) யோகம்	(5) மீமாம்ஸை	(6) வேதாந்தம்

என்பன.

நாஸ்திக தரிசனங்களுள் (1) சர்வாகம், (2) ஜைனம், (3) பௌத்தம் என்பவை அடங்கும்.

இந்த தரிசனங்களில் மிகவும் ஆழ்ந்த, நுண்ணிய கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன. உயிர்கள் வாழ்க்கையின் உண்மையான இன்பத்தைப் பெறுவது எப்படி என்பது இவைகளில் மிகவும் நுணுக்கமாக ஆராயப் பட்டிருக்கிறது.

இன்பம் பெறவும் முக்தி அல்லது மோட்சம் எய்தவும் மிகவும் முக்கியமான, தவிர்க்க முடியாத நிபந்தனை மாசற்ற தூய வாழ்க்கை வாழ்தலே என்பதை இவை எல்லாமே ஒப்புக் கொள்கின்றன.

கடவுளின் உருவங்கள் பலப்பல :

வேத காலத்தில் ஒரே கடவுள் 'ஓம்' என்றும், பிரம்மம் என்றும், இந்திரன், வருணன் என்றும் பல் வேறு வகைகளில் வழிபடப்பட்டார்; பிறகு உலகைப் படைத்து, பாதுகாத்து, அழிக்கும் முத்தொழில்களையும் அந்தக் கடவுளே பிரும்மா, விஷ்ணு, சிவன் என்ற மூன்று உருவங்களில் செய்யும் திரிமூர்த்திகளென்று போற்றப் பட்டார். புராண காலத்தில் இந்த மூன்று தெய்வங்களே

முக்கியமாகக் கொண்டாடப்பட்டார்கள். பிற்காலத்தில் பிரம்மாவின் வழிபாடு அருகிவிட்டதாயினும் விஷ்ணுவும் சிவனும் அன்றுபோலவே இன்றும் பூஜிக்கப்படுகிருர்கள். ஆனுல், இந்த விஷ்ணு வரையறைக்குட்பட்டவரல்ல, எங்கும் பரவி இருப்பவர், சர்வ வியாபி.

ஜலே விஷ்ணு: ஸ்தலே விஷ்ணுர்விஷ்ணு: பர்வதமஸ்தகே।
ஜ்வாலாமாலாகுலே விஷ்ணு: ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்॥

எந்த தெய்வத்தின் உருவில் நாம் கடவுளை வணங்கினுலும் நம் வழிபாடு முழுதும் வானத்திலிருந்து பொழியும் நீர் முழுதும் இறுதியில் கடலில் போய்ச் சேருவதைப் போல, அந்த பகவானின் திருவடிகளிலேயே சேருகிறது.

ஆகாசாத்பதிதம் தோயம் யதா கச்சதி ஸாகரம்।
ஸர்வதேவநமஸ்கார: கேசவம் ப்ரதி கச்சதி॥

விஷ்ணு மத்ஸ்யம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனன், பரசுராமன், ராமன், கிருஷ்ணன், புத்தன், கல்கி என்ற பத்து அவதாரங்கள் எடுத்தார் என்று சொல்லப்படுகிறது.

விஷ்ணுவை வழிபடுபவர்கள் வைணவரென்றும், சிவனை பூஜிப்பவர்கள் சைவர் என்றும் சொல்லப்படுவர். சிலர் சிவன், விஷ்ணு, சூரியன், கணபதி, அம்பிகை என்ற மூர்த்தங்களான பஞ்சாயதனங்களில் கடவுளை வழிபடுகிருர்கள். ஸ்மார்த்தர் எனப்படுவோர் தாம் சிறப்பாக எந்த சம்பிரதாயத்தையும் சேர்ந்தவரென்று சொல்லிக்

जले विष्णुः स्थले विशुर्विष्णुः पर्वतमस्तके।
ज्वालामालाकुले विष्णुः सर्वं विष्णुमयं जगत्॥

आकाशात्पतितं तोयं यथा गच्छति सागरम्।
सर्वदेवनमस्कारः केशवं प्रति गच्छति॥

கொள்வதோ, தீட்சை பெறுவதோ இல்லை; ஸ்மிருதியில் கூறப்பட்டுள்ள வழியில் நடப்பதோடு சரி. இவை யல்லாமல் இன்னும் எத்தனையோ தெய்வங்களின் பூசை-வழிபாடுகள் இந்துக்களிடையே நடந்துவருகின்றன.

சங்கராச்சாரியர், ராமானுஜாச்சாரியர், மத்வாச்சாரியர், வல்லபாச்சாரியர் நிம்பார்க்காச்சாரியர் முதலிய சமய ஆச்சாரியர்கள் முறையே அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம், துவைதாத்வைதம், சுத்தாத்வைதம் முதலிய பல சம்பிரதாயங்களை வழக்கிற்குக் கொண்டு வந்தார்கள். யாருக்கு எந்த வழி பிடித்தமோ அதில் செல்வதற்கு எந்தத் தடையும் கிடையாது.

நீதிநெறியில் நடத்தல்:

ஹிந்து மதத்தின் பல்வேறு உபாசநா மார்க்கங்கள் எல்லாவற்றிலுமே ஒரு பொதுவான அம்சம் காணப்படுகிறது. அது பக்தி மார்க்கமாயினும் ஞான மார்க்கமாயினும் யோக மார்க்கமாயினும் தந்திர மார்க்கமாயினும் —எல்லாவற்றிலுமே நீதி வழியினின்று வழுவாத நடத்தை வற்புறுத்தப்பட்டிருக்கிறது. நீதி வழி என்பது ஹிந்து மதத்தில் அடிச்சிலையாகும். யம நியமங்கள் இன்றி அதில் எதுவுமே நடக்காது. நியமங்களை விட யமம் அதிகம் வற்புறுத்தப்படுகிறது. மனு மகாராஜன்,

யமான்ஸேவேத ஸததம் ந நித்யம் நியமான்புத: ।
யமான் பதத்யகுர்வாணோ நியமான் கேவலான் பஜன் ॥

(மனுஸ்மிருதி 4, 204)

புத்திமான்கள் நியமங்களை மட்டும் அனுஷ்டிப்பதோடு இராமல் யமங்களையும் எப்பொழுதும் பாதுகாத்து

यमान्सेवेत सततं न नित्यं नियमान्बुधः ।
यमान्पतत्यकुर्वाणो नियमान्केवलान् भजन् ॥

வரவேண்டும். நியமங்களில் மட்டும் உறுதியாய் இருந்து வருபவன் இழிவுறுவான்.

யமங்களாவன: பிரம்மசரியம், தயை, க்ஷமை (மன்னித்தல்), தியானம், சத்தியம், நம்ரதை (பணிவு), அஹிம்சை, கள்ளாமை, இனிமை, இந்திரியங்களை அடக்குதல்.

நியமங்களாவன: ஸ்நானம், மௌனம், உபவாசம், யக்ஞம் (வேள்வி), சுவாத்யாயம் (தானே நூல்களை ஓதுதல்), இந்திரியங்களை அடக்குதல், குருவின் பணிவிடை, சௌசம் (உடல் தூய்மை), வெகுளாமை, மெய்ம் மறதி யின்மை.

வர்ண ஏற்பாடு:

ஹிந்து மதத்தில் நான்கு வர்ணங்கள் ஏற்கப் பட்டிருக்கின்றன. அவை பிராம்மண, க்ஷத்ரிய, வைசிய, சூத்திர என்பவை.

தான் கல்வி கற்பதும் பிறருக்குக் கற்பிப்பதும், தான் வேள்வி இயற்றுவதும் பிறரின் வேள்வியை நடத்தி வைப்பதும், தானம் பெறுவதும் அளிப்பதும் என்ற இவை பிராம்மண வர்ணத்திற்குரிய தர்மங்கள் அல்லது கடமைகள் ஆகும்.

குடிமக்களைப் பாதுகாத்தல், தானமளித்தல், வேள்வி இயற்றுதல், கல்வி கற்றல், சிற்றின்பங்களை விழையாமை என்ற இவை க்ஷத்திரியனுக்குரிய கடமைகளாகும்.

பசு முதலிய கால் நடைகளைப் பாதுகாத்து வளர்த்தல், தானம் செய்தல், வேள்வி செய்தல், கல்வி கற்றல், வாணிபம் செய்தல், வியவசாயம் செய்தல் என்ற இவை வைசியருக்குரிய கடமைகள்.

மனத்தில் துவேஷமின்றி எல்லா வர்ணத்தாருக்கும் உதவுதலும் பணிபுரிதலும் சூத்திர வர்ணத்தாரின் கடமைகளாகும்.

முதலில் அவரவர் குணங்களை அனுசரித்து வர்ணப்

பாகுபாடுகள் செய்யப்பட்டன. பிறகு ஒருவர் எந்த வர்ணத்தைச் சேர்ந்த தாய் தந்தையருக்குப் பிறக்கிருரோ அதுவே அவர் வர்ணம் என்ருகிவிட்டது. இதனுலேயே சாதிப் பிரிவுகள் தோன்றின.

ஆசிரம ஏற்பாடு:

பண்டைய ரிஷிகள் சமுதாயம் ஒழுங்காக நடந்து கொண்டு போவதற்காக அதை நான்கு வர்ணங்களாகப் பிரித்தமைத்தது போலவே நான்கு ஆசிரமங்களையும் அமைத்திருந்தார்கள். இதற்கென அவர்கள் ஒவ்வொரு மனிதன் வாழ்க்கையையும் நான்காகக் கூறிட்டார்கள்.

அவை (1) பிரம்மசரியம், (2) கிருஹஸ்தம், (3) வானப்பிரஸ்தம், (4) சந்நியாசம் என்பன.

பிரம்மசரியம்:

பையன் மிகவும் எளிய முறையில் வாழ்ந்து கொண்டு, குருவின் ஆசிரமத்தில் இருந்து, வேதங்கள் ஓதும் காலமே பிரம்மசரிய ஆசிரமப்பருவம்.

பிரம்மசாரிக்கு மனுமகாராஜன்,

வர்ஜயேன்மது மாம்ஸம் ச கந்தம் மால்யம் ரஸான் ஸ்திரிய: ।
சுக்தானி யானி ஸர்வாணி ப்ராணினும் சைவ ஹிம்ஸனம் ॥
(மனுஸ்மிருதி 2, 178)

மது, (கள், சாராயம்) புலால், சந்தனம் முதலிய மணம் தரும் பொருள்கள், மாலை, இனிப்புப் பானங்கள், பெண்கள், மிட்டாய், அழுகி ஊசிப்போன பண்டங்கள், என்ற இவற்றை பிரம்மசாரி ஒதுக்க வேண்டும்; அவன் எந்த உயிருக்கும் ஹிம்சை புரியக் கூடாது என்றும்,

---

वर्जयेन्मधु मांसं च गन्धं माल्यं रसान् स्त्रियः ।
शुक्तानि यानि सर्वाणि प्राणिनां चैव हिंसनम् ॥

அப்யங்கமஞ்ஜனம் சாக்ஷ்ணோருபானச் சத்ரதாரணம் ।
காமம் க்ரோதம் ச லோபம் ச நர்த்தனம் கீதவாதனம் ॥
த்யூதம் ச ஜனவாதம் ச பரீவாதம் ததாऽன்ருதம் ।
ஸ்த்ரீணாம் ச ப்ரேக்ஷணாலம்பமுபகாதம் பரஸ்ய ச ॥
(மனுஸ்மிருதி 2, 179–80)

உடலில் எண்ணெய் தடவிக்கொள்ளுதல், கண்ணுக்கு மை தீட்டிக்கொள்ளுதல், செருப்பணிதல், குடை பிடித்துக்கொள்ளுதல், காமம் குரோதம் லோபம் ஆகியவைகளில் சிக்குதல், ஆடுதல் பாடுதல், வாத்தியம் இசைத்தல், சூதாடுதல், சண்டை சச்சரவு செய்தல், பிறரை தூஷித்தல், பொய் புகலுதல், பெண்களைப் பார்த்தல், அவர்களின் இணக்கம் ஆகியவை தவிர்க்க வேண்டியவை என்றும் சொல்லியிருக்கிறார்.

கிருஹஸ்தன் :

ஆசிரியரிடம் கல்வி கற்றுன பிறகு சமாவர்த்தனம் என்ற சடங்கு செய்து குருவுக்கு தட்சிணை அளித்து விட்டு, பிரம்மசாரி தன் வீடு திரும்பி மணம் செய்து கொண்டு கிருஹஸ்த தர்மம் அல்லது இல்வாழ்க்கையில் புகவேண்டும். கடவுளை எய்துவதை தன் குறிக்கோளாய்க் கொண்டு வாழ்க்கை இன்பங்களை நுகருவதும், விருந்தினரை உபசரித்து உயிர்ப் பிராணிகளுக்கு உதவுதலும், தூயமுறையில் வாழ்தலும் கிருஹஸ்தனுக்குள்ள கடமைகள் ஆகும்.

अभ्यङ्गमञ्जनं चाक्ष्णोरुपानच्छत्रधारणम् ।
कामं क्रोधं च लोभं च नर्तनं गीतवादनम् ॥
द्यूतं च जनवादं च परीवादं तथाऽनृतम् ।
स्त्रीणां च प्रेक्षणालम्भमुपघातं परस्य च ॥

வானப்பிரஸ்தம் :

உலக இன்பங்களை அனுபவித்த பின், பிள்ளைகளுக்கு வயது வந்து குடும்பப்பொறுப்பை ஏற்றுக்கொண்டதும் கிருஹஸ்தன் வீட்டைவிட்டு வெளியேறி காட்டுக்குச் சென்றுவிடவேண்டும். வானப்பிரஸ்த ஆசிரமத்தைச் சேர்ந்தவனது கடமைகள் தான் ஓதுதலும், வைராக்கியமும், விருந்தினரைப் பேணுதலும், எல்லா உயிர்களிடமும் அன்பும் கருணையும் காட்டுதலும் ஆகும்.

சந்நியாசம் :

வானப்பிரஸ்தத்தை அடுத்து சந்நியாசம் வருகிறது. சந்நியாசம் ஏற்கும் ஒருவர் கீழ்க்கண்டவாறு உறுதி செய்துகொள்ள வேண்டியுள்ளது :

புத்ரைஷுணு வித்தைஷுணு லோகைஷுணு மயா ।
பரித்யக்தாः மத்தः ஸர்வபூதேப்யோऽபயமஸ்து ॥

(இன்று முதல் நான் என் பிள்ளைகளிடமும் பணத்திலும் புகழிலும் உள்ள ஆசையை விட்டு விட்டேன்; என்றால் எந்த உயிருக்கும் எத்தகைய திங்கும் நேராமல் பார்த்துக்கொள்வேன்.)

சந்நியாச ஆசிரமத்தில் அனைத்தையும் துறந்து மக்கள் சமுதாயத்திற்குப் பணிபுரியும் பொருட்டு வீட்டை விட்டு வெளியேறுதல் கடமையென்று கூறப்பட்டிருக்கிறது. சந்நியாசி எல்லாவகையான கர்மங்களையும், சடங்குகளையும் விட்டுவிடவேண்டும். அவன் பிச்சை ஏற்று உண்ணவும், ஒரே இடத்தில் தங்காமல் சுற்றிக் கொண்டேயிருக்கவும், எப்பொழுதும் பிரம்ம தியானத்தில் ஆழ்ந்திருக்கவும் வேண்டும்.

पुत्रैषणा वित्तैषणा लोकैषणा मया
परित्यक्ता:, मत्त: सर्वभूतेभ्योऽभयमस्तु ।

கர்மமும் புனர்ஜன்மம் அல்லது மறு பிறவியும் :

இந்து மதத்தில் கர்மம் என்ற கொள்கை வற்புறுத்தப் பட்டிருக்கிறது. நாம் செய்யும் கர்மத்திற்கேற்ப பயன் கிடைக்கும். தினை விதைத்தால் தினையும், வினை விதைத்தால் வினையும் விளையும். நாம் எப்பொழுதும் நற்பணிகள் புரிந்துவந்தால் நமக்கு நல்ல பயன் கிடைக்கும்.

நாம் செய்யும் கர்மங்களுக்கேற்ப நமக்குப் பிறவி அமைகிறது. நாம் மீண்டும் பிறப்பதும், சொர்க்கம் சேருவதும், நரகில் புகுவதும், மோட்சம் எய்துவதும் எல்லாம் நாம் புரியும் கர்மங்களுக்கேற்ப, நம் விதியின்படி நிகழ்கின்றன.

நான்கு புருஷார்த்தங்கள் :

ஹிந்து மதத்தின் சாஸ்திரங்களை வகுத்தவர்கள் ஒவ்வொரு மனிதனும் நான்கு புருஷார்த்தங்களை (பேறுகளை) எய்த வேண்டும் என்று கூறி இருக்கிறார்கள். அவை தர்மம் (அறம்), அர்த்தம் (பொருள்), காமம் (இன்பம்), மோட்சம் (வீடு) என்பன. எந்த கர்மங்கள் அல்லது செயல்களினால் சமுதாயம் நிலைத்து நிற்கிறதோ அது தர்மம் எனப்படுகிறது. அர்த்தம் என்றால் பணமும் பொருள்களும். சுகம் பெறுவதற்கு பணம் காசு வேண்டும். ஆனால் இந்தப் பணமும் தர்ம வழியில் நின்று பெறப்படவேண்டுமே தவிர அதர்ம வழியில் பெறப்படக்கூடாது.

'காமம்' என்றால் விரும்புதல் அல்லது, விழைதல். சுகத்தை வேண்டியே மனிதன் எல்லாக் காரியங்களும் செய்கிறான். ஆனால் விரும்பிச் செய்யும் எல்லாக்காரியங்களும் தர்மத்திற்கு ஒத்தவையாய் இருத்தல் மிகவும் அவசியம்.

மோட்சம் என்றால் விடுதலை—கட்டிலிருந்து விடுபடுதல். மனிதன் மீண்டும் மீண்டும் உலகில் வந்து பிறக்க

வேண்டியிராமல் மோட்சம் அல்லது வீடுபேறு பெறு வதற்கு உதவும் வழியில் செல்லவும், அதற்கு ஒத்த காரியங்களையே புரியவும் வேண்டும். தர்மம் தவருமல் நடத்தலே கடமை. தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்ற இவை அனைத்திற்கும் ஆதாரமாயிருப்பது முதலில் உள்ள தர்மமே. ஹிந்து மதத்தில் இந்த நான்கு புருஷார்த்தங்களிலும் முதலாவதான தர்மத்தையே மிகவும் வற்புறுத்தியிருக்கிறது.

அநித்யானி சரீராணி விபவோ நைவ சாச்வதஃ ।
நித்யம் ஸந்நிஹிதோம்ருத்யுঃ கர்த்தவ்யோ தர்மஸங்க்ரஹঃ ॥

யமன் எப்பொழுதும் நம் தலையின்மீது வட்டமிட்டுக் கொண்டிருக்கிருன். உடலும் சதமல்ல, பணமும் சதமல்ல. ஆகையால் தர்மம் செய்துகொண்டே வாழ வேண்டும்.

க்ருஹீத இவ கேசேஷு ம்ருத்யுனா தர்மமாசரேத் ।

யமன் கையில் நம் கேசம் சிக்கிக்கொண்டு இருப்பதை உன்னி நாம் எப்பொழுதும் தர்மம் தவருது நடந்து வரவேண்டும்.

अनित्यानि शरीराणि विभवो नैव शाश्वतः ।
नित्यं सन्निहितो मृत्युः कर्तव्यो धर्मसंग्रहः ॥
गृहीत इव केशेषु मृत्युना धर्ममाचरेत् ।

இரண்டாம் அத்தியாயம்

ஸ்மிருதிகள்

ஹிந்துக்களின் சட்டங்களுக்கு (Hindu Law) ஆதாரமாயிருப்பது ஸ்மிருதிகள்.

ஸ்மிருதிகளில் சமுதாயம் ஒழுங்காய் நடப்பதற்கு வேண்டிய நியமங்கள், விதி முறைகள் விஸ்தாரமாகத் தரப்பட்டிருக்கின்றன. நாம் எந்த ஆசிரமத்தில் எவ்வாறு வாழ்க்கை நடத்தவேண்டும், நம் கடமைகள், தர்மம் என்ன, நமது ஆசார விசாரங்கள் எவ்வாறிருக்க வேண்டும், அதற்கான விதிமுறைகள் யாவை என்ற இவையனைத்தையும் பற்றி ஸ்மிருதிகளில் ஆராய்ந்து கூறப்பட்டிருக்கிறது.

மனுஸ்மிருதி ஸ்மிருதிகள் அனைத்திலும் பழையது.

தர்மத்தின் இலட்சணங்கள் : (1)

தாரணாத் தர்மமித்யாஹுः தர்மோ தாரயதே ப்ரஜாः ।

எல்லா உயிர்களையும் தாங்கி, பாதுகாத்துப் போஷித்து வருவதால் மகரிஷிகள் அதை தர்மமென்று அழைத்தார்கள்.

வேதः ஸ்மிருதிः ஸதாசாரः ஸ்வஸ்ய ச ப்ரியமாத்மனः ।
ஏதத்சதுர்விதம் ப்ராஹுः ஸாக்ஷாத் தர்மஸ்ய லக்ஷணம் ॥

(மனுஸ்மிருதி 2, 12)

धारणाद् धर्ममित्याहुः धर्मो धारयते प्रजाः ।

वेदः स्मृतिः सदाचारः स्वस्य च प्रियमात्मनः ।
एतदचतुर्विधं प्राहुः साक्षाद् धर्मस्य लक्षणम् ॥

வேதம் ஸ்மிருதி, சதாசாரம் (நல்லோர் பெரியோர் சென்ற வழி) ஆத்மதிருப்தி அல்லது தன் மனச்சாட்சி ஒப்புவது என்ற இவையே தர்மத்தின் உண்மையான இலட்சணங்கள்.

அஹிம்ஸா ஸத்யமஸ்தேயம் சௌசமிந்த்ரியநிக்ரஹ: ।
ஏதம் ஸாமாஸிகம் தர்மம் சாதுர்வர்ண்யேऽப்ரவீன்மனு: ॥
(மனுஸ்மிருதி 10, 63)

ஹிம்சை புரியாமை, உண்மையே பேசுதல், திருடாமை, தூய்மையோடிருத்தல், பொறிகளை அடக்குதல் என்ற இவைகளே நான்கு வர்ணங்களுக்கும் உரிய கடமைகளென்று மனு சுருக்கமாகக் கூறியிருக்கிறார்.

த்ருதி: க்ஷமா தமோऽஸ்தேயம் சௌசமிந்த்ரியநிக்ரஹ: ।
தீர்வித்யா ஸத்யமக்ரோதோ தசகம் தர்மலக்ஷணம் ॥
(மனுஸ்மிருதி 6, 92)

தர்மத்தின் லட்சணங்கள் பத்து. அவை, திருதி (உறுதி), க்ஷமை (மன்னித்தல்), தமம் (புலனடக்கம்), கள்ளாமை, மனோவாக்கு காயங்களின் தூய்மை, பொறிகளை அடக்குதல், நல்லறிவு, கல்வி, சத்தியம், வெகுளாமை என்பனவாம்.

ஆன்ருசம்ஸ்யம் க்ஷமா ஸத்யமஹிம்ஸா தானமார்ஜவம் ।
ப்ரீதி: ப்ரஸாதோ மாதுர்யம் மார்தவம் ச யமா தச ॥

अहिंसा सत्यमस्तेयं शौचमिन्द्रियनिग्रह: ।
एतं सामासिकं धर्मं चातुर्वर्ण्येऽब्रवीन्मनु: ॥
धृति: क्षमा दमोऽस्तेयं शौचमिन्द्रियनिग्रह: ।
धीर्विद्या सत्यमक्रोधो दशकं धर्मलक्षणम् ॥
आनृशंस्यं क्षमा सत्यमहिंसा दानमार्जवम् ।
प्रीति: प्रसादो माधुर्यं मार्दवं च यमा दश ॥

சௌசமிஜ்யா தபோ தானம் ஸ்வாத்யாயோபஸ்தநிக்ரஹ: ।
வ்ரதம் மௌனேபவாஸம் ச ஸ்நானம் ச நியமா தச ।

(அத்ரி ஸ்மிருதி 48)

கொடுமை புரியாமை, தயை, க்ஷமை (மன்னித்தல்), சத்தியம், அஹிம்சை, தானம், பணிவு, பிரியம், மகிழ்ச்சி, இன்சொல், மிருதுவாகப் பழகுதல் என்ற இவை பத்தும் யமம் எனப்படும்.

உடல் தூய்மை, யக்ஞம் (வேள்வி), தவம், தானம், தானே கற்றல், பிரம்மசரியம், விரத அனுஷ்டானம், மௌனம், உபவாசம், ஸ்நானம் என்ற இவை பத்தும் நியமங்கள் ஆகும்.

தயைசெய், எவரையும் இம்சிக்காதே (2)

பரஸ்மின் பந்துவர்கே வா மித்ரே த்வேஷ்யே ரிபௌ ததா ।
ஆபன்னே ரக்ஷிதவ்யம் து தயைஷா பரிகீர்த்திதா ॥

(அத்ரி ஸ்மிருதி 41)

அன்னியனே நம்மவனே, உற்றார் உறவினரோ நண்பரோ, சத்துருவோ அல்லது பகைவனே இவர்களில் எவராயிருப்பினும் ஆபத்தில் சிக்கியிருந்தால் அவர் துயருறுவதைக் கண்டு தாளாது அவரை அதிலிருந்து விடுவிக்க முற்படுவதே தயை அல்லது கருணை என்பது.

அனுமந்தா விசஸிதா நிஹந்தா க்ரயவிக்ரயீ ।
ஸம்ஸ்கர்த்தா சோபஹர்த்தா ச காதகச்சேதி காதகா: ॥

शौचमिज्या तपो दानं स्वाध्यायोपस्थनिग्रहः ।
व्रतं मौनोपवासं च स्नानं च नियमा दश ॥

परस्मिन् बन्धुवर्गे वा मित्रे द्वेष्ये रिपौ तथा ।
आपन्ने रक्षितव्यं तु दयैषा परिकीर्तिता ॥

अनुमन्ता विशसिता निहन्ता क्रयविक्रयी ।
संस्कर्ता चोपहर्ता च खादकश्चेति घातकाः ॥

ஒருவன் புலால் உண்டால் அவனை மட்டும் உயிரைக் கொன்ற பாவம் சாராது. அவனல்லாமல் புலால் தயாரிக்க அனுமதியளித்தவன், பிராணியைக் கொன்றவன், அதை வெட்டியவன், அதை வாங்கியவன், விற்றவன், பிறகு அதைச் சமைத்தவன், சமைத்ததை எடுத்து வந்தவன், அதைத் தின்றவன் ஆகிய எல்லோருமே கொலை புரிந்த பாவத்திற்கு உள்ளாவார்கள்.

ஐந்து பெரு வேள்விகள் (3)

பஞ்சஸூனா கிருஹஸ்தஸ்ய சுல்லீ பேஷண்யுபஸ்கர: ।
கண்டனீ சோதகும்பச்ச பத்யதே யாஸ்து வாஹயன் ॥
(மனுஸ்மிருதி 3, 68)

இல்வாழ்வோன் வீட்டில் அடுப்பு, இயந்திரம், துடைப்பம், உரல், நீர் கொணரும் குடம், ஆகியவைகளின் மூலம் உயிர்களுக்கு ஹிம்சை விளைகிறது. இந்த ஐந்து இடங்களில் ஹிம்சை நடப்பதால் இவைகளினால் மனிதன் பாவத்தில் பிணிப்புறுகிறான்.

தாஸாம் க்ரமேண ஸர்வாஸாம் நிஷ்க்ருத்யர்த்தம் மஹர்ஷிபி:
பஞ்ச க்லுப்தா மஹாயஜ்ஞா: ப்ரத்யஹம் க்ருஹமேதினாம் ॥
(மனுஸ்மிருதி 3, 69)

இல்வாழ்வோன் இந்த ஐந்து பாவங்களிலிருந்து விடுபடவேண்டி மகரிஷிகள் தினமும் ஐந்து மகா யக்ஞங்கள் அல்லது பெருவேள்விகள் இயற்றுமாறு விதித்திருக்கிறார்கள்.

पञ्चसूना गृहस्थस्य चुल्ली पेषण्युपस्कर: ।
कण्डनी चोदकुम्भश्च बध्यते यास्तु वाहयन् ॥
तासां क्रमेण सर्वासां निष्कृत्यर्थं महर्षिभि: ।
पञ्च क्लृप्ता महायज्ञा: प्रत्यहं गृहमेधिनाम् ॥

அத்யாபனம் ப்ரஹ்மயஜ்ஞ:
பித்ருயஜ்ஞஸ்து தர்ப்பணம் ।
ஹோமோ தைவோ பலிர்பௌதோ
ந்ருயஜ்ஞோऽதி திபூஜனம் ॥
(மனுஸ்மிருதி 3, 70)

மாணவர்களுக்கு கல்வி கற்பித்தல் பிரம்மயக்ஞமும், தர்ப்பணம் செய்தல் பித்ரு யக்ஞமும், ஹவனம் அல்லது ஹோமம் செய்தல் தேவயக்ஞமும், பலியிட்டு வைசுவ தேவம் புரிதல் பூதயக்ஞமும், விருந்தினரை வரவேற்று உபசரித்தல் மானுட யக்ஞமும் ஆகும். இவை ஐந்தும் மகா யக்ஞங்கள் எனப்படும்.

சுனும் ச பதிதானும் ச ச்வபசாம் பாபரோகிணும் ।
வாயஸானும் க்ருமிணும் ச சனைர்நிர்வபேத் புவி ॥
(மனுஸ்மிருதி 3, 92)

நாய், பதிதர், சண்டாளர், கொடிய நோய் உற்றவர், காகம், ஈ, எறும்புகள் என்ற இந்த ஐந்திற்காகவும் உணவிலிருந்து ஆறு பிடிகள் எடுத்துவைத்து மெதுவாக பூமியின் மீது பலியிடவேண்டும். இது வைசுவதேவ பலியக்ஞம் எனப்படும்.

பெரியோருக்குப் பணிவிடை புரிதல்: (4)

அபிவாதனசீலஸ்ய நித்யம் வ்ருத்தோபஸேவின: ।
சத்வாரி தஸ்ய வர்தந்தே ஆயுர்வித்யா யசோ பலம் ॥
(மனுஸ்மிருதி 2, 121)

अध्यापनं ब्रह्मयज्ञः पितृयज्ञस्तु तर्पणम् ।
होमो दैवो बलिर्भौतो नृयज्ञोऽतिथिपूजनम् ॥

शुनां च पतितानां च श्वपचां पापरोगिणाम् ।
वायसानां कृमीणां च शनकैर्निर्वपेद् भुवि ॥

अभिवादनशीलस्य नित्यं वृद्धोपसेविनः ।
चत्वारि तस्य वर्धन्ते आयुर्विद्या यशो बलम् ॥

பெரியோருக்கு வணங்கிப் பழக்கமுள்ளவனுக்கும், தினமும் பெற்ரேருக்கும் ஆசிரியருக்கும், பெரியவர்களுக்கும் பணிவிடை புரிபவனுக்கும் ஆயுளும் கல்வியும் புகழும் பலமும் பெருகுகின்றன.

யாம் மாதாபிதரௌ க்லேசம் ஸஹேதே ஸம்பவே ந்ருணாம் ।
ந தஸ்ய நிஷ்க்ருதிः சக்யா கர்த்தும் வர்ஷசதைரபி ॥
(ம. ஸ். 2, 227)

பிள்ளையைப் பெறுவதனல் தாய் தந்தையருக்கு விளையும் கஷ்டத்திற்கு ஈடு செய்யக் கருதி பிள்ளைகள் அவர்களுக்கு நூறு ஆண்டுகள் பணிபுரிந்தாலும் அந்தக் கடனிலிருந்து விடுபட முடியாது.

தயோர் நித்யம் ப்ரியம் குர்யாதாசார்யஸ்ய ச ஸர்வதா ।
தேஷ்வேவ த்ரிஷு துஷ்டேஷு தபः ஸர்வம் ஸமாப்யதே ॥
(ம. ஸ். 2, 228)

தாய் தந்தையருக்கும் ஆசிரியருக்கும் எது உகந்ததோ அதையே (பிள்ளை) செய்யவேண்டும். இந்த மூவரும் மகிழ்ச்சி அடைந்தால் போதும், மகன் வேறு தவம் எதுவும் இயற்ற வேண்டாம்.

பெண்களுக்கு மதிப்பளி : (5)

யத்ர நார்யஸ்து பூஜ்யந்தே ரமந்தே தத்ர தேவதாः ।
யத்ரைதாஸ்து ந பூஜ்யந்தே ஸர்வாஸ்தத்ராபலாः க்ரியாः ॥
(ம. ஸ். 3, 56)

यां मातापितरौ क्लेशं सहेते सम्भवे नृणाम् ।
न तस्य निष्कृतिः शक्या कर्तुं वर्षशतैरपि ॥

तयोर्नित्यं प्रियं कुर्यादाचार्यस्य च सर्वदा ।
तेष्वेव त्रिषु तुष्टेषु तपः सर्वं समाप्यते ॥

यत्र नार्यस्तु पूज्यन्ते रमन्ते तत्र देवताः ।
यत्रैतास्तु न पूज्यन्ते सर्वास्तत्राफलाः क्रियाः ॥

எங்கே பெண்கள் போற்றப்படுகிறார்களோ அங்கே தெய்வங்கள் மகிழ்கின்றன. பெண்கள் மதிக்கப்படாத இடங்களிலோ எல்லாக் காரியங்களுமே பாழ்தான்.

சோசந்தி ஜாமயோ யத்ர வினச்யத்யாசு தத்குலம் ।
ந சோசந்தி து யத்ரைதா வர்ததே தத்தி ஸர்வதா ॥

(ம. ஸ். 3, 57)

எந்தக் குலத்தில் பெண்கள் துயருறுகிறார்களோ அது விரைவில் அழிந்துபோகிறது. பெண்கள் துயரமில்லாது வாழ்ந்துவரும் குடும்பங்களோ பல்கிப் பெருகுகின்றன.

ஜாமயோ யானி கேஹானி ச்ரப்யந்த்யப்ரதிபூஜிதாः ।
தானி க்ருத்யாஹதானீவ வினச்யந்தி ஸமந்ததः ।

(ம. ஸ். 3, 58)

அவமானத்திற்குள்ளானமையால் பெண்கள் எந்த வீட்டிற்கு சாபமளிக்கிறார்களோ அந்த வீடு பூகம்பத்தினால் தகர்ந்து பாழானதைப்போல இடிந்து மண்ணோடு மண்ணாகி விடுகிறது.


தஸ்மாதேதாः ஸதா பூஜ்யா பூஷணாச்சாதனாசனைः ।
பூதிகாமைர் னரைர்நித்யம் ஸத்காரேஷூத்ஸவேஷு ச ॥

(ம. ஸ். 3, 59)

शोचन्ति जामयो यत्र विनश्यत्याशु तत्कुलम् ।
न शोचन्ति तु यत्रैता वर्धते तद्धि सर्वदा ॥

जामयो यानि गेहानि श्रप्यन्त्यप्रतिपूजिताः ।
तानि कृत्याहतानीव विनश्यन्ति समन्ततः ॥

तस्मादेताः सदा पूज्या भूषणाच्छादनाशनैः ।
भूतिकामैर्नरैर्नित्यं सत्कारेषूत्सवेषु च ॥



ஆகையால் தாம் நன்ருய் இருக்கவேண்டுமென்று நினைப்பவர்கள் தம் விட்டுப் பெண்களுக்கு எப்பொழுதும் உணவும் உடையும் அணிகள் முதலியனவும் அளித்து அவர்களைப் போற்றவும், விழாக்களிலும் பண்டிகைகளிலும் இவைகளை மேலும் அதிகமாகச் செய்யவும் வேண்டும்.

ஸந்துஷ்டோ பார்யயா பர்தா பர்த்ரா பார்யா ததைவ ச ।
யஸ்மின்னேவ குலே நித்யம் கல்யாணம் தத்ர வை த்ருவம் ॥
(ம. ஸ். 3, 60)

எந்தக் குடும்பத்தில் மனைவி கணவனிடமும், கணவன் மனைவியிடமும் மகிழ்ந்து திருப்தியாயிருக்கிருர்களோ அந்தக் குடும்பத்திற்கு எல்லாம் நல்லதாகவே நடந்து வரும் என்பதில் சந்தேகமில்லை.

सन्तुष्टो भार्यया भर्ता भर्त्रा भार्या तथैव च ।
यस्मिन्नेव कुले नित्यं कल्याणं तत्र वै ध्रुवम् ॥

மூன்றும் அத்தியாயம்

இதிஹாஸங்கள்

1. வால்மீகி ராமாயணம்

வால்மீகி முனிவர் சம்ஸ்கிருத மொழியில் ஆதிகவி எனப்படுவார், உலகின் ஆதிகவி என்பதிலும் தவறில்லை. அம்பின் அடிபட்டுக் குற்றுயிராய் விழுந்த கிரௌஞ்சப் பறவையைக் கண்டதும் அவர் உள்ளத்திலிருந்து வெள்ளம்போல் பீரிட்டு வந்த சோககாவியமே இராமாயணம். அதைக் கேட்டு உள்ளம் உருகாதார் யார்? முனிவர் உள்ளத்தில் தோன்றிய சோகம் (துயரம்) பின்வரும் சுலோகமாக வெளிவந்தது.

மா நிஷாத ப்ரதிஷ்டாஸ்த்வமகம: சாச்வதீ: ஸமா: ।
யத் க்ரௌஞ்சமிதுநாதேகமவதீ: காமமோஹிதம் ॥

'ஏ வேடனே! இணைபிரியாதிருந்த கிரௌஞ்சப் பறவைகளின் ஜோடியில் காம மயக்கத்திலாழ்ந்திருந்த ஆண் பறவையை அடித்துக் கொன்று விட்டமையால் நீ அழிவாய். உனக்கு நற்கதியே கிடைக்காது' என்று சபித்தார்.

ஸ்ரீ ராமனின் புண்ணியக் கதையினுருவில் வான்மீகி முனிவர் எந்த சமூகத்தைப் படம் பிடித்துக் காட்டியிருக்

मा निषाद प्रतिष्ठास्त्वमगमः शाश्वतीः समाः ।
यत् क्रौञ्चमिथुनादेकमवधीः काममोहितम् ॥

கிருரோ அதிலடங்கியுள்ள எண்ணிலடங்காத செய்திகள் உலகம் உள்ளளவும் மக்களுக்கு ஊக்கமளித்தும், வழி துலக்கியும் வரும்.

தர்மமே உலகின் சாரம்: (1)

தர்மோ ஹி பரமோ லோகே தர்மே ஸத்யம் ப்ரதிஷ்டிதம் ।
(வால்மீகி ராமாயணம், அயோ. கா. 21, 41)

உலகத்தில் உள்ள அனைத்திலும் தர்மமே பெரியது. தர்மத்தின் மீதுதான் சத்தியம் நிலைத்திருக்கிறது.

தர்மார்தர்த்தः ப்ரபவதே தர்மாத்ப்ரபவதே ஸுகம் ।
தர்மேண லபதே ஸர்வம் தர்மஸாரமிதம் ஜகத் ॥



धर्मो हि परमो लोके धर्मे सत्यं प्रतिष्ठितम् ।

धर्मादर्थः प्रभवते धर्मात्प्रभवते सुखम् ।
धर्मेण लभते सर्वं धर्मसारमिदं जगत् ॥

ஆத்மானம் நியமைஸ்தைஸ்தை: கர்சயித்வா ப்ரயத்னத: ।
ப்ராப்யதே நிபுணைர்தர்ம: ந ஸுகால்லப்யதே ஸுகம் ॥
(வா. ரா. ஆரண்ய கா. 9, 30–31)

தர்மத்திலிருந்து பொருள் கிடைக்கிறது. தர்மத்திலிருந்து சுகம் கிடைக்கிறது. தர்மத்திலிருந்தே எல்லாம் பெறப்படுகின்றன. இந்த உலகின் சாரமே தர்மம்தான்.

சாதனைகள் புரிவதில் வல்லரான மனிதர் வித விதமான விரதங்கள், நியமங்கள் ஆகியவைகளினால் உடலை வாட்டி வதக்கி தர்மத்தைப் பெறுகிறார்கள். உலகில் கஷ்டங்களின்றி சுகம் பெறமுடியாது.

சத்தியமே அனைத்திலும் உயர்ந்தது : (2)

ஆஹு: ஸத்யம் ஹி பரமம் தர்மம் தர்மவிதோ ஜனா: ।
ஸத்யமேகபதம் ப்ரஹ்ம ஸத்யே தர்ம: ப்ரதிஷ்டித: ॥
ஸத்யமேவாக்ஷயா வேதா: ஸத்யேனாவாப்யதே பரம் ।
(வா. ரா. ஆரண்ய கா. 14, 3, 7)

தர்மத்தின் இரகசியத்தை அறிந்த பெரியவர்கள் சத்தியமே தர்மங்களனைத்திலும் சிறந்தது என்று சொல்கிறார்கள். சத்தியமே பரமபதமான பிரம்மம். சத்தியத்தின் மீதே தர்மம் நிலைபெற்றிருக்கிறது. சத்தியமே நித்தியமாய், என்றுமுள்ள வேதங்கள் ; பரப்பிரம்மத்தை—பரம்பொருளை சத்தியத்தினால்தான் எய்த முடியும்.

आत्मानं नियमैस्तैस्तैः कर्शयित्वा प्रयत्नतः ।
प्राप्यते निपुणैर्धर्मः न सुखाल्लभ्यते सुखम् ॥

आहुः सत्यं हि परमं धर्मं धर्मविदो जनाः ।
सत्यमेकपदं ब्रह्म सत्ये धर्मः प्रतिष्ठितः ॥
सत्यमेवाक्षया वेदाः सत्येनावाप्यते परम् ।

சத்யமேவேச்வரோ லோகே ஸத்யே பத்மாச்ரிதா ஸதா ।
ஸத்யமூலானி ஸர்வாணி ஸத்யான்னாஸ்தி பரம் பதம் ॥
(வா. ரா. அ. 109, 13)

இந்த சம்சாரத்தில் சத்தியமொன்றே ஈசுவரன்; பணம் பொருளெல்லாம் சத்தியத்தின் மீதுதான் நிற்கின்றன. சத்தியமே எல்லாப் பொருள்களுக்கும் ஆதாரம், வேர். சத்தியத்தைத் தவிர்த்து பரமபதம், இறுதிநிலை வேறு இல்லை.

உத்விஜந்தே யதா ஸர்ப்பான் னராதன்ருத வாதினः ।
தர்மः ஸத்யம் பரம் லோகே மூலம் ஸ்வர்கஸ்ய சோச்யதே ॥
(வா. ரா. அ. 109, 13)

பொய் பேசுகிறவர்களைக் கண்டால் மக்கள் விஷப் பாம்பைக் கண்டது போல் ஒதுங்கிப் போகிறார்கள். உலகில் சத்தியமே தலைசிறந்த தர்மம். அதுவே சுவர்கத்தின் தலைவாயில்—மூலகாரணம் எனப்பட்டிருக்கிறது.

தத்தமிஷ்டம் ஹுதம் சைவ தப்தானி ச தபாம்ஸி ச ।
வேதாः ஸத்யப்ரதிஷ்டானாஸ்தஸ்மாத் ஸத்யபரோ பவேத் ॥
(வா. ரா. அ. 109, 14)

தானம், யக்ஞம், ஹோமம், பலவகையான தவங்கள், வேதம் ஆகியவை அனைத்திற்கும் சத்தியமே ஆதாரமாகையால் நாம் சத்தியத்தினின்று வழுவாது இருந்து வரவேண்டும்.

सत्यमेवेश्वरो लोके सत्ये पद्माश्रिता सदा ।
सत्यमूलानि सर्वाणि सत्यान्नास्ति परं पदम् ॥

उद्विजन्ते यथा सर्पान्नरादनृतवादिन: ।
धर्म: सत्यं परं लोके मूलं स्वर्गस्य चोच्यते ॥

दत्तमिष्टं हुतं चैव तप्तानि च तपांसि च ।
वेदा: सत्यप्रतिष्ठानास्तस्मात् सत्यपरो भवेत् ॥

கோபம் பாவம் சண்டாளம் : (3)

தன்யாஸ்தே புருஷச்ரேஷ்டா: யே புத்யா க்ரோதமுத்திதம்।
நிருந்தந்தி மஹாத்மானோ தீப்தமக்னிமிவாம்பஸா ॥
(வா. ரா. சு. காண்டம் 55, 4)

பற்றி எரியும் தீயை நீரை ஊற்றி அவிப்பதைப் போல தம் உள்ளத்தில் எழும் கோபத்தை அடக்கி அவித்து விடும் மகாத்மாக்கள் உண்மையில் போற்றத் தக்கவர்கள்.

க்ருத்த: பாபம் ந குர்யாத்க: க்ருத்தோ ஹன்யாத் குரூனபி।
க்ருத்த: பருஷயா வாசா நர: ஸாதூனதிக்ஷிபேத் ॥
(வா. ரா. சு. கா. 55, 5)

உலகத்தில் கோபம் வந்ததென்றால் அதன் விளைவாக பாபச் செயல்கள் புரியாதவர்களைப் பார்க்கமுடியுமா? கோபமுற்றவன் தன் குருவையே கொன்று போடுவானே! கோபம் வந்த மனிதன் கொடூரமான சொற்களினால் நல்லோர் பெரியோரையும் அவமானத்திற்குள்ளாக்குவான்.

வாச்யாவாச்யம் ப்ரகுபிதோ ந விஜானாதி கர்ஹிசித்।
நாகார்யமஸ்தி க்ருத்தஸ்ய நாவாச்யம் வித்யதே க்வசித் ॥
(வா. ரா. சு. கா. 55, 6)

கோபம் வந்து விட்டால் மனிதனுக்கு என்ன பேசலாம், என்ன பேசக்கூடாது என்பதே தெரிவதில்லை. கோபமுற்றவன் எதையும் செய்யத் துணிவான். அவன்

धन्यास्ते पुरुषश्रेष्ठाः ये बुद्ध्या क्रोधमुत्थितम् ।
निरुन्धन्ति महात्मानो दीप्तमग्निमिवाम्भसा ॥

क्रुद्धः पापं न कुर्यात्कः क्रुद्धो हन्याद् गुरूनपि ।
क्रुद्धः परुषया वाचा नरः साधूनधिक्षिपेत् ॥

वाच्यावाच्यं प्रकुपितो न विजानाति कर्हिचित् ।
नाकार्यमस्ति क्रुद्धस्य नावाच्यं विद्यते क्वचित् ॥

வாயிலிருந்து என்னதான் வரும் என்பது ஒன்றும் நிச்சயமில்லை.

யஃ ஸமுத்பதிதம் க்ரோதம் க்ஷமயைவ நிரஸ்யதி ।
யதோரகஸ்த்வசம் ஜிர்ணும் ஸ வை புருஷ உச்யதே ॥
(வா. ரா. சு. கா 55, 7)

தன் உள்ளத்திலிருந்து பொங்கி எழும் கோபத்தை நாகப்பாம்பு சட்டையை உரிப்பதைப்போல உதறிவிடக் கூடியவனே உண்மையில் மனிதன் எனத் தக்கவன்.

சகிப்பைப் போன்ற அணி வேறில்லை: (4)

அலங்காரோ ஹி நாரிணும் க்ஷமா து புருஷஸ்ய வா ।
க்ஷமா தானம் க்ஷமா ஸத்யம் க்ஷமா யஜ்ஞுச்ச புத்ரிகாஃ ॥
க்ஷமா யசஃ க்ஷமா தர்மஃ க்ஷமாயாம் விஷ்டிதம் ஜகத் ॥
(வா. ரா. சு. கா. 33, 7–8)

பெண்களுக்கும் சரி, ஆடவர்களுக்கும் சரி, நல்ல ஆபரணம் ஒன்று உண்டென்றால் அது சகிப்புத் தன்மை தான். சகிப்பே தானம்; சகிப்பே சத்தியம்; சகிப்பே யக்ஞம்; சகிப்பே கீர்த்தி; சகிப்பே தர்மம். இந்த உலகம் முழுவதையும் சகிப்பே வளைத்துக் கொண்டிருக்கிறது.

யோக வாசிட்டம்

வாழ்க்கையின் நிலையாமையையும், சுகபோகங்களின் அழியும் தன்மையையும் கண்ட ஸ்ரீராமசந்திரனுக்கு எல்லாவற்றிலும் வெறுப்புண்டாகிவிட்டது.

यः समुत्पतितं क्रोधं क्षमयैव निरस्यति ।
यथोरगस्त्वचं जीर्णां स वै पुरुष उच्यते ॥

अलङ्कारो हि नारीणां क्षमा तु पुरुषस्य वा ।
क्षमा दानं क्षमा सत्यं क्षमा यज्ञश्च पुत्रिकाः ॥
क्षमा यशः क्षमा धर्मः क्षमायां विष्ठितं जगत् ।

ஊணிலோ உறக்கத்திலோ அவருக்கு மனம் செல்ல வில்லே. எதைக்கண்டாலும், எல்லாக் காரியங்களிலுமே அவருக்கு ஓர் அருவருப்பு வந்து விட்டது.

அந்த நிலேயில் வசிட்ட முனிவர் அவருக்களித்த உபதேசங்களே "யோக வாசிஷ்டம்" எனப்படுகிறது.

எத்தனேயோ கதைகளின் மூலம் வசிட்ட முனிவர் மனத்தைக் கட்டி வயமாக்குவதற்குள்ள ஒரேவழி ஆன்ம ஞானம் பெறுவதே, தன்னே அறிவதே என்று போதித் தார்.

ஞானம் எல்லாத்துயரங்களேயும் அழித்துவிடும். ஞானத்திஞல்தான் மனிதன் ஜீவன் முக்த தசையை அடைய இயலும்.

துயரத்தை ஒழிப்பது எப்படி ? (1)

ந ததஸ்தி கிஞ்சித் துக்கம் ஸம்ஸாரீ யந்ந ப்ராப்நோதி

(யோக வாசிட்டம் 2, 12, 14)

உலகில் வாழும் மாந்தர் அனுபவிக்க நேராத துயரமே கிடையாது.

ஸம்ஸார ஏவ து:காநாம் ஸீமாந்த இதி கத்யதே ।
தன்மத்யே பதிதே தேஹே ஸுகமாஸாத்யதே கதம் ॥

(யோ. வா. 5, 9, 52)

இந்த உலகம்தான் எல்லாத் துயரங்களுக்கும் தோற்றுவாய். இதில் வாழும் மனிதனுக்கு இன்பம் வேண்டுமென்ருல் எப்படிக் கிடைக்கும் ?

न तदस्ति किञ्चिद् दुखं संसारी यन्न प्राप्नोति ।

संसार एव दुःखानां सीमान्त इति कथ्यते ।
तन्मध्ये पतिते देहे सुखमासाद्यते कथम् ॥

ஸம்ஸார விஷவ்ருக்ஷோऽயமேகமாஸ்பதமாபதாம் ।
அஜ்ஞம் ஸம்மோஹயேன்னித்யம் மௌர்க்யம் யத்னேன நாசயேத் ॥

(யோ. வா. 2, 11, 69)

உலகம் என்ற நச்சு மரமே எல்லா ஆபத்துக் களையும் விளைவிக்கிறது. ஆனால் அது அறிவிலிகளை மட்டும் வதைப்பதாகையால் அறிவுள்ளவர்கள் முயன்று தம் அறியாமையை அகற்றிக்கொண்டு விடவேண்டும்.

ஆத்மாவலோகனே யத்னஃ கர்தவ்யோ பூதிமிச்சதா ।
ஸர்வதுஃகசிரச்சேத ஆத்மாலோகேன ஜாயதே ॥

(யோ. வா. 5, 75, 45)

தன் நன்மையைக் கோருகிறவர்கள் ஆன்ம ஞானம் பெற முயலவேண்டும். எல்லாத் துயரங்களும், துக்கங்களுமே ஆன்ம ஞானம் பெற்றதும் அழிந்து போம்.

ஆண்மை அனைத்தையும் அளிக்கும் (2)

அத்ரைகம் பௌருஷம் யத்னம் வர்ஜயித்வேதரா கதிஃ ।
ஸர்வதுஃகக்ஷயப்ராப்தௌ ந காசிதுபபத்யதே ॥

(யோ. வா. 3, 6, 14)

இங்கே, இந்த உலகத்தில் எல்லாத் துக்கங்களையும் போக்குவதற்கு ஆண்மையோடு செய்யும் முயற்சி என்ற ஒன்றைத்தவிர வேறு வழியில்லை.

संसार विषवृक्षोऽयमेकमास्पदमापदाम् ।
अज्ञं सम्मोहयेन्नित्यं मौर्ख्यं यत्नेन नाशयेत् ॥

आत्मावलोकने यत्नः कर्तव्यो भूतिमिच्छता ।
सर्वदुःखशिरश्छेद आत्मालोकेन जायते ॥

अत्रैकं पौरुषं यत्नं वर्जयित्वेतरा गतिः ।
सर्वदुःखक्षयप्राप्तौ न काचिदुपपद्यते ॥

ஆத்மைவ ஹ்யாத்மனோ பந்துராத்மைவ ரிபுராத்மன: ।
ஆத்மாத்மனா ந சேத் த்ராதஸ்ததுபாயோऽஸ்தி நேதர: ॥
(யோ. வா. 3, 162, 18)

நம் ஆன்மாவே நம் நண்பனும், நம் ஆன்மாவே நம் பகையும் ஆகும். நாமே நம்மைக் காத்துக் கொள்ளாவிட்டால் தப்புவதற்கு வேறு வழியில்லை.

ஆலஸ்யம் யதி ந பவேஜ்ஜகத்யனர்த்த:
கோ ந ஸ்யாத் பஹுதனகோ பஹுச்ருதோ வா ।
ஆலஸ்யாதியமவனி: ஸஸாகராந்தா
ஸம்பூர்ணா நரபசுபிச்ச நிர்தனைச்ச ॥
(யோ. வா. 2, 5, 30)

இந்த உலகத்தில் சோம்பல் என்ற பாவி மட்டும் கெடுக்காவிட்டால் எந்த மனிதனுல்தான் தனவந்தனுக ஆக முடியாது, எவன்தான் வித்துவானுக ஆக மாட்டான்? சோம்பல் என்ற ஒன்று இருப்பதனுலேயே கடல் வரையில் பரந்துள்ள இந்தப் பூவுலகில் ஏழைகளும் அறிவிலிகளும் மலிந்திருக்கிறுர்கள்.

மோட்சத்தின் காவலர்: (3)

ஸந்தோஷ: ஸாதுஸங்கச்ச விசாரோऽத சமஸ்ததா ।
ஏத ஏவ பவாம்போதாவுபாயாஸ்தரணே ந்ருணாம் ॥
(யோ. வா. 2, 12, 19)

आत्मैव ह्यात्मनो बन्धुरात्मैव रिपुरात्मन: ।
आत्मात्मना न चेत् त्रातस्तदुपायोऽस्ति नेतर: ॥

आलस्यं यदि न भवेज्जगत्यनर्थ:
को न स्याद् बहुधनको बहुश्रुतो वा ।
आलस्यादियमवनि: ससागरान्ता
सम्पूर्णा नरपशुभिश्च निर्धनैश्च ॥

सन्तोष: साधुसङ्गश्च विचारोऽथ शमस्तथा ।
एत एव भवाम्भोधावुपायास्तरणे नृणाम् ॥

சம்சார சாகரத்தைக் கடப்பதற்கு நாலே வழிகள் தான் உள்ளன. அவை சமம், (சாந்தம்), சந்தோஷம் (திருப்தி), நல்லோர் பெரியோர் சேர்க்கை, சிந்தனை ஆகியவை ஆகும்.

மோக்ஷத்வாரே த்வாரபாலாச்சத்வார: பரிகீர்த்திதா: ।
சமோ விசார: ஸந்தோஷச்சதுர்த்த: ஸாதுஸங்கம: ॥
(யோ. வா. 2, 16, 58)

மோட்ச லோகத்தின் வாயில் காவலர் நான்கு பேர். அவர்கள் சாந்தம், திருப்தி, நல்லோர் பெரியோர் கூட்டுறவு, சிந்தனை ஆகியவை.

எல்லாம் மனத்தின் கேளிக்கைகள் : (4)

மனோ ஹி ஜகதாம் கர்த்ரு மனோ ஹி புருஷ: ஸ்ம்ருத: ।

மனமே உலகை உருவாக்குகிறது. மனமேதான் புருஷன்.

மனோ யதனுஸந்தத்தே ததேவாப்னோதி தத்க்ஷணாத் ।

மனம் எதில் குறி வைக்கிறதோ அதை உடனே பெற்றுவிடுகிறது.

யேன யேன யதா யத்யத்யதா ஸம்வேத்யதேऽநக ।
தேன தேன ததா தத்தத்ததா ஸமனுபூயதே ॥
(யோ. வா. 3, 60, 16)

मोक्षद्वारे द्वारपालाश्चत्वारः परिकीर्तिताः ।
शमो विचारः सन्तोषश्चतुर्थः साधुसङ्गमः ॥

मनो हि जगतां कर्तृ मनो हि पुरुषः स्मृतः ।

मनो यदनुसन्धत्ते तदेवाप्नोति तत्क्षणात् ।

येन येन यथा यद्यद्यथा संवेद्यतेऽनघ ।
तेन तेन तथा तत्तत्तदा समनुभूयते ॥

எவன் எதைப்பற்றி எவ்வகையில் சிந்திக்கிருனே அதை அதே வகையில் அனுபவிக்க ஆரம்பித்து விடுகிருன்.

அம்ருதத்வம் விஷம் யாதி ஸதைவாம்ருதவேதனுத் ।
சத்ருர்மித்ரத்வமாயாதி மித்ரஸம்வித்தி வேதனுத் ॥
(யோ. வா. 3, 60, 17)

விஷத்தை விஷமென்று அன்றி அமுதமென்று எப்பொழுதும் எண்ணிக்கொண்டே யிருப்பதனுல் விஷமும் அமுதமாகி விடுகிறது. எப்பொழுதும் நட்புறவோடு இருந்து வந்தால் நம் பகைவனும் நமக்கு நண்பனுக ஆகிவிடுவான்.

அந்த:சீதலதாயாம் து லப்தாயாம் சீதலம் ஜகத் ।
(யோ. வா. 4, 55, 33)

நம் உள்ளத்தில் நிம்மதி யிருந்தால் நாம் உலகெங்கிலும் அமைதி நிலவுவதாக உணருவோம்.

சித்தம் வ்ருத்திவிஹினம் தேயதா யாத மசித்ததாம் ।
ததா மோக்ஷமயீமந்த:ஸத்தாமாப்னேஷி தாம் ததாம் ॥
(யோ. வா. 5, 21, 26)

சித்தம் ஓட்டம் எதுவுமின்றி வெற்றுப் பாண்டமாக ஆகிவிடும்போது அது தன் இயல்பான தன்மையைத் துறந்து விடுகிறது. அந்நிலையில் அது தன்னுள்ளேயே பரந்த மோட்சமென்ற ஆன்மானுபவம் பெறுகிறது.

अमृतत्वं विषं याति सदैवामृतवेदनात् ।
शत्रुर्मित्रत्वमायाति मित्रसंवित्तिवेदनात् ॥

अन्त:शीतलतायां तु लब्धायां शीतलं जगत् ।

चित्तं वृत्तिविहीनं ते यदा यातमचित्तताम् ।
तदा मोक्षमयीमन्त:सत्तामाप्नोषि तां तताम् ॥

மனம் ஆசை பிடித்தது: (5)

வசிட்டர், 'ராமா, ஒரு மிகவும் பெரியதும் கொடியதுமான காடு. அதில் நான் ஒரு விநோதமான மனிதனைக் கண்டேன்' என்றார்.

'குருதேவரே, அவன் எப்படி இருந்தான்?'

'அவன் ஆகாயத்திற்கும் பூமிக்குமாக வளர்ந்தும் பருத்துமிருந்தான். அவனுக்கு பல்லாயிரம் கண்களும் கைகளுமிருந்தன. ஆயினும் அவன் பித்தன் போல் காணப்பட்டான்.

'எதனால்?'

'அவன் ஒருகணம் இங்கும், மறுகணம் அங்கும் ஓடிக் கொண்டிருந்தான். ஒரு சமயம் அழுதான், உடனே சிரித்தான்; இடையிடையே குதித்துக் கூத்தாடுவதும், துயருற்றுக் கீழே விழுந்து புரளுவதுமாயிருந்தான். அவன் தன் பல்வேறு கண்களினாலும் பலப் பல பொருள்களைக் கண்டு கொண்டிருந்தான். இதனால் அவைகளைப் பெறுவதற்காக இங்குமங்கும் ஓடிக் கொண்டிருந்தான். ஒரு பொருளைப் பெற்றுச் சுவைத்ததும் அதை அப்படியே போட்டு விட்டு இன்னொன்றை நோக்கி ஓடுவான். விரும்பிச் சென்ற பொருள் கிடைக்காத போது அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வரும். அந் நிலையில் தன் பல்லாயிரம் கைகளினாலும் தன்னைத்தானே புடைத்துக் கொண்டு வலி தாங்காமல் ஓவென்று ஒப்பாரி வைப்பான்.

'பயந்து, நிழலுக்காக மரம் செடிகள் அடர்ந்த ஓரிடத்தை நாடிச் சென்றால் செடிகளிலுள்ள முட்கள் அவன் உடலைக் கீறி ரத்தக் களறியாக்கிவிடும். வலி தாங்காமல் கத்துவான். அமைதியைத் தேடி ஓடுகையில் வழியில் ஒரு கிணறு தென்படவே அதில் குதித்தான். அந்தக் கிணற்றில் பாம்பும் தேளும் முதலைகளுமாய் இருந்தன; தாள முடியாத நாற்றம் வேறு. இவற்றி

லிருந்து எப்படியோ தப்பிக் கரை ஏறி வெளி வந்தவன் அங்கே யிருந்த ஒரு வாழைத் தோட்டத்தில் போய் அமர்ந்து சிறிது களைப்பாறினான். ஆனால் அவன் தலைச் சுழி அவனை அங்கும் அதிக நேரம் தங்கவிடாமையால் அங்கிருந்து எழுந்து இங்குமங்கும் ஓடுவதும் ஆடு வதுமா யிருந்தான். அமைதி என்பது அவனுக்குக் கிட்டாத பொருளாகிவிட்டது.

'ஆனால் அவன் என் பக்கம் தன் பார்வையைச் செலுத்தவேயில்லை. நான்தான் அவனருகில் சென்று எவ்வளவோ முயன்று, ஓரிடத்தில் அமர்த்தி, அவன்மீது என் பார்வையைச் செலுத்தினேன். இவ்வாறு செய்ததும் அவனது பல்லாயிரம் கைகளும், கண்களும் வெயில்பட்ட பனிபோல் உருகி விழ ஆரம்பித்து விட்டன. சிறிது நேரத்திற்குள் உடல் முழுதும் தீய்ந்து போகவும், அவன் என் உள்ளத்தில் அடங்கி அமைதியுற்றான்.'

'நீங்கள் வர்ணித்த அந்த மனிதன் யார்? காடு என்று சொன்னீர்களே, அது யாது?'

'குழந்தாய் ராமா! இந்த உலகமே, சம்சாரமே அந்தக் காடு. அந்த தன் நினைவையிழந்த, தன் நிலையை மறந்த மனிதன் இந்த மனமே. பல்லாயிரம் வாசனைகளே அவனுக்கிருந்த கண்களும், கைகளும். அந்த இருண்ட கிணறே இல்வாழ்க்கை. முட்செடிகள் நிறைந்த புதரே நரகம். வாழைத் தோட்டமே சுவர்க்கம். நானே விவேகம் அல்லது நல்லறிவு. சிந்தனையும் மூதறிவும் தலையெடுத்ததும் மனம் அழிந்து ஒழிந்து போகிறது.'

மனத்தை எதிர்த்து நிற்பதெப்படி? (6)

அத்யாத்மவித்யாதிகம: ஸாதுஸங்கம ஏவ ச ।

अध्यात्मविद्याधिगमः साधुसङ्गम एव च ।

வாஸனாஸம்பரித்யாக: ப்ராணஸ்பந்த நிரோதனம் ।
ஏதாஸ்தா யுக்தய: புஷ்டா: ஸந்தி சித்தஜயே கில ।
(யோ. வா. 5, 92, 36)

சித்தத்தின் மீது வெற்றி கொள்வதற்குள்ள உறுதியான உபாயங்கள் ஆன்மீக தத்துவ நூல்களை ஓதுவதும் நல்லோர் பெரியோரின் சேர்க்கையும், வாசனைகளை ஒழித்தலும், பிராணாயாமம் செய்தலுமேயாகும்.

மனனம் க்ருத்ரிமம் ரூபம் மமைதன்ன யதோऽஸ்ம்யஹம் ।
இதி தத்த்யாகத: சாந்தம் சேதோ ப்ரஹ்ம ஸனாதனம் ॥
(யோ. வா. 4, 11, 27)

'என் மனம் எனது உண்மையான உருவல்ல, வேடம் புனைந்துள்ள உருவமே. ஆகையால் நான் மனம் அல்லேன்'—என்று ஓயாது எண்ணிக் கொண்டிருந்து மனத்தை ஒழித்துவிடுகையில் அது அடங்கி, என்றும் உள்ள பிரம்மமாக ஆகிவிடுகிறது.

போகேச்சாமாத்ரகோ பந்தஸ்
தத்த்யாகோ மோக்ஷ உச்யதே । (யோ. வா. 4, 35, 3)

சுக போகங்களை விரும்புவதுதான் கட்டு; அவைகளைத் துறப்பதே மோட்சம் எனப்படுகிறது.

பரம் பௌருஷமாச்ரித்ய யத்னாத்பரமயா தியா ।
போகாசாபாவனாம் சித்தாத்ஸமூலாமலமுத்தரேத் ॥
(யோ. வா. 3, 114, 51)

वासनासम्परित्यागः प्राणस्पन्दनिरोधनम् ।
एतास्ता युक्तयः पुष्टाः सन्ति चित्तजये किल ॥
मननं कृत्रिमं रूपं ममैतन्न यतोऽस्म्यहम् ।
इति तत्त्यागतः शान्तं चेतो ब्रह्म सनातनम् ॥
भोगेच्छामात्रको बन्धस्तत्त्यागो मोक्ष उच्यते ।
परं पौरुषमाश्रित्य यत्नात्परमया धिया ।
भोगाशाभावनां चित्तात्समूलामलमुद्धरेत् ॥

பரம புருஷார்த்தத்தின் உதவியுடன் புத்தி பூர்வமாய் முயன்று, சுகபோகங்களிடம் உள்ள ஆசையை சித்தத்தினின்று வேரோடு களைந்தெறிந்து விடவேண்டும்.

அயம் பந்துரயம் நேதி கணனு லகுசேதஸாம் ।
உதாரசரிதானும் து விகதாவரணைவ தீ: ॥
(யோ. வா. 5, 18, 61)

இவன் என் உறவினன், இவன் உறவினனல்ல என்ற வேறுபாட்டுணர்வு இழிந்த மனிதர்களுக்கே இருக்கும். பரந்த மனமுள்ளவர்களின் அறிவில் இத்தகைய வேற்றுமை எண்ணங்கள் இருக்கமாட்டா. அவர்களின் அறிவு இம்மாதிரியான எல்லா மூட்டங்களிலிருந்தும் விடுபட்டு விடுகிறது.

ஏகத்வே வித்யமானஸ்ய ஸர்வகஸ்ய கிலாத்மன: ।
அயம் பந்து: பரச்சாயமித்யஸௌ கலனு குத: ॥
(யோ. வா. 5, 20, 4)

எல்லா மனிதர்களின் உள்ளேயும் ஒரே ஆன்மா வீற்றிருக்கையில் இவன் என் சகோதரன், அவன் அன்னியன் என்ற இந்த வேறுபாட்டுணர்வு எப்படி வருகிறது?

ஜீவன் முக்தரான ஜனகராஜன்: (7)

வசிட்டர் ராமசந்திரனிடம், 'குழந்தாய், மனிதன் என்றால் ஜனக மகாராஜனைப் போல் ஜீவன்முக்தனாக வாழவேண்டும்' என்றார்.

अयं बन्धुरयं नेति गणना लघुचेतसाम् ।
उदारचरितानां तु विगतावरणैव धीः ॥

एकत्वे विद्यमानस्य सर्वगस्य किलात्मनः ।
अयं बन्धुः परश्चायमित्यसौ कलना कुतः ॥

இதற்கு ராமசந்திரன், 'குருதேவரே, ஜனக மகா ராஜன் எப்படி ஜீவன் முக்தரானுர் என்பதை எனக்கு தயவுசெய்து கூறுங்கள்' என்று கேட்டுக் கொண்டார்.

வசிட்டர் : குழந்தாய் ராமா ! ஜனகராஜன் விதேகம் என்ற ராஜ்யத்தை ஆண்டு வந்தார். அவர் பெரிய பராக்ரமசாலி ; பரந்த உள்ளம் படைத்தவர். அவர் பேரன்புடனும் கவனத்துடனும் தம் குடிமக்களை கண்ணை இமைபோல் பாதுகாத்து வந்தார்.

வசந்த ருதுவில் ஒருநாள் ஜனகர் உத்தியான வனத்தில் உலாவிக் கொண்டிருந்தார். அவரது மெய் காவலர், சேவகர் முதலிய எல்லோரும் தொலைவில் நின்றுகொண்டிருக்க, அவர் மட்டும் தனியே மரங்களும் செடிகளும் அடர்ந்திருந்த பகுதியில் உலாவலானுர். அங்கே சித்தர்கள் சிலர் இருந்து வந்தார்கள். சித்தர்கள் சாதாரணமாய் எவர் கண்ணுக்கும் படமாட்டார்கள். ஜனகருக்கும் அவர்கள் இருப்பது தெரியவில்லை. ஆனுல் அவர்கள் சேர்ந்தும், தனித்தனியாகவும் பாடிய பாட்டு அவர் காதில் விழுந்தது.

சித்தர்கள், 'எது எல்லாவற்றிலும் இருக்கிறதோ, எல்லாமே எதனுடையவையோ, எதனிடமிருந்து எல்லாம் தோன்றி யிருக்கின்றனவோ, எல்லாமே எதன் பொருட்டு இருக்கின்றனவோ, எதன் மூலம் எல்லாம் உருவாகி யிருக் கின்றனவோ, எது தானே எல்லாமா யிருக்கிறதோ, எது சத்தியமோ, எது ஆன்மாவின் ஆன்மாவோ, அந்த உண்மைக்கு உண்மையும், பரம தத்துவமுமான ஆன் மாவை நாங்கள் வழிபடுகிறோம்' என்றும்,

''அ'கரத்திலிருந்து 'ன'கரம் வரையில் எது எல்லா எழுத்துக்களினுள்ளும் விளங்குகிறதோ, அல்லும் பகலும் எதை எல்லோரும் உச்சரித்து வருகிருர்களோ, அந்த ஆன்ம ரூபியான பரம்பொருளை நாங்கள் போற்றி வழி படுகிறோம்' என்றும்,

'உள்ளமென்ற குகையினுள்ளே பளபளவென்று

ஒளி வீசிக் கொண்டிருக்கும் பரம்பொருளை அறியாமல் அதை வெளியே எங்கும் தேடி அலைகின்றவர்கள், கையிலுள்ள கௌஸ்துப மணியை வீசி எறிந்துவிட்டு, கண்ணாடித் துண்டைத் தேடி அலையும் அறிவிலிகளைப் போன்றவர்கள்' என்றும்,

'எல்லா ஆசைகளையும் அறவே ஒழித்துவிடுகையில் உள்ளத்தில் உண்மையான ஞானம் உதிக்கும். அப்பொழுதுதான் பிரம்மம் எய்தப்பட்டு, வாசனைகளின் வேர் முற்றிலும் களையப்படும்' என்றும்,

'சம்சாரத்தின் எல்லா போகங்களும் இறுதியில் துன்பத்தில்தான் முடியும் என்பது தெரிந்திருந்தும், அவைகளைத் தேடி ஓடிக் கொண்டிருப்பவன் மனிதனல்ல, வெறும் கழுதை' என்றும்,

'இந்திரன் எவ்வாறு தன் வஜ்ராயுதத்தினால் மலைகளைத் தாக்கித் தகர்த்தானோ அதேபோல மீண்டும் மீண்டும் தலையெடுப்பதும் விழுவதுமாயுள்ள இந்திரியங்களென்ற விஷப் பாம்புகளை விவேகம், ஞானம் என்ற தடிகளினால் மீண்டும் மீண்டும் புடைத்து அடக்க வேண்டும்' என்றும்,

'ஒவ்வொரு மனிதனும் சாந்தி அல்லது மன அமைதியிலிருந்து பெறப்படும் இன்பத்தைத் தேட வேண்டும். எவனது சித்தம் அடங்கி விடுகிறதோ அவனால்தான் தன் உண்மை உருவை அறியமுடியும். அதை அறிந்து விட்டால் ஒரே இன்பந்தான்' என்றும் அவர்களது பாட்டின் பொருள் அமைந்திருந்தது.

'ஏ ராமா, ஜனக மகாராஜன் சித்தர்களின் இந்த கீதங்களைச் செவி மடுத்ததும் அவருக்கு மிகுந்த வருத்தமாகி விட்டது; தம்மை எச்சரிப்பதற்காகவே அவர்கள் இந்த கீதங்களை இசைத்ததாகத் தோன்றிற்று. அவர், 'ஐயோ! என் வாழ்க்கை முழுதும் இதுகாறும் பாழாகி விட்டதே. நான் இதுவரையில் எந்த நிலையை எய்தியான பிறகு வேறு எதுவும் தேவைப்படாதோ அந்த இறுதி

நிலையை, உயர்ந்த பதத்தை, அந்த எல்லையில்லாத சாந்தியைப் பெற்றேனில்லையே' என்று எண்ணி மிகவும் வருந்தினர்.

உடனே தன் பரிவாரங்களை உடனழைத்துக்கொண்டு அரண்மனைக்குத் திரும்பிச் சென்றார். வானளாவிய அந்த மாளிகையின் மேல்மாடத்தை அடைந்து தனிமையிலிருந்து பின்வருமாறு யோசிக்கலானார் :

ஆஹா ! மற்ற எல்லோரையும் போல நானும் இந்த உலகத்தின் சுகபோகங்களைத் தேடிக்கொண்டிருப்பது எவ்வளவு வருந்தத்தக்க விஷயம் ! எல்லோரும் பலவகைத் துன்பங்களில் கிடந்துழலுவதைப் போலவே நானும் கிடந்து துடித்துக் கொண்டிருக்கிறேனே ! என் ஆயுள் எவ்வளவு குறைவு ! எனது இந்த ராஜ்யம்தான் எவ்வளவு சிறியது ! இவ்வாறிருந்தும் நான் அறிவில்லாதவர்களைப் போல கவலையற்று உட்கார்ந்திருக்கிறேனே ! கண்ணிமைப் பொழுதில் அழிந்துபோகும் இன்பங்களைப் பெறுவதற்காக நான் எவ்வளவு அல்லல்படுகிறேன் ! இது எவ்வளவு அறிவீனம் !

இன்பம் நிரம்பித் ததும்புவதாய்க் காணும் எல்லாவற்றிலும் இருப்பது துன்பமே. இவ்வாறிருந்தும் என் மனம் அவைகளைத் தேடி அலைகிறது. பெரிய பெரிய வீரர்களும், பலவான்களும் தம் ஆயுள் முடிந்ததும் எமன் வாயில் புகுந்து மறைந்திருப்பது தெரிந்தும் நான் ஏதோ சாகாவரம் பெற்று வந்திருப்பாக எண்ணிக் கொண்டிருக்கிறேனே !

இந்த உலகிலுள்ள எதுதான் சத்தியம்? எது என்றும் கெடுவதோ, அழிந்துபோவதோ இல்லை? இந் நிலையில் நான் எதை விரும்புவதும், எதனிடம் பற்று வைப்பதும் சரி? உலகின் எல்லா இன்பங்களுமே விஷம் போன்றவையே. ஏதோ ஒன்றைப் பெற்றேரும், அதன் பிறகு வேறு எதுவுமே தேவைப்படாது என்றே, ஏதோ ஒரு பொருளை அடைந்தபிறகு நமக்கு ஒரு குறையு

மிராது, எல்லாம் இன்பம்தான் என்றும் சொல்லக்கூடிய ஒன்று உலகத்தில் இல்லவே இல்லை. நமக்கு ஒரு பொருள் கிடைத்ததென்றால் அது கிடைத்த அடியிலேயே இன்னொரு பொருளில் ஆசை உண்டாகி விடுகிறது. விட்டில் பூச்சிகள் பழுத்த பழமென்று எண்ணி விளக்கில்



போய்விழுவதையும், விழுந்ததும் எரிந்து அழிந்து போவதையும் போல நாமும் சிற்றின்பங்களையே உண்மையான பேரின்பமென்று எண்ணிக் கொண்டு ஓடுவதும், அதிலேயே அழிந்து போவதுமா யிருக்கிறோம். இறுதியில், 'ஐயோ! நம் வாழ்வு முழுதும் பாழாகிவிட்டதே' என்று கையைப் பிசைந்துகொண்டு வீணில் வருந்துகிறோம்.

இதுவரையில் நடந்ததென்னவோ நடந்துவிட்டது. அவை போகட்டும். நான் எவ்வளவோ இன்பங்கள் அனுபவித்தேன்; நான் பட்டுள்ள கஷ்டங்களுக்கும் கணக்கில்லை. ஆனால் இனியும் இவ்வாறு நடக்க விடப் போவதில்லை. இதுவரையில் உறங்கிக்கொண்டிருந்த நான் இப்போது விழித்தெழுந்துவிட்டேன். இனி உலகின் சுகபோகங்களின் சூழலில் சிக்கப்போவ

தில்லை. இதுவரையில் இந்த என் மனம்தான் இன்பங்களில் ஆசை காட்டி என்னை அலைக்கழித்துக்கொண்டிருந்தது. அது இனி மீண்டும் தலையெடுக்காதவாறு அதை அடித்து ஒழித்துவிடப் போகிறேன். இந்த உடல் என்னுடையது, இந்த ராஜ்யம் என்னுடையது, இந்தச் செல்வம் என்னுடையது என்ற எல்லா எண்ணங்களுமே தவறு, அறியாமை. உண்மை அறிவினால், ஞானத்தினால் இந்த அறிவின்மையை, அஞ்ஞானத்தை அழித்துவிட்டு, மனத்தையும் கொன்று தீர்த்து, உண்மையான அமைதியை, சாந்தியைப் பெறுவேன்.

இவ்வாறெல்லாம் சிந்தித்தபின் ஜனக மகாராஜன் தன் மனத்திற்கு, தன் சித்தத்திற்கு பின்வருமாறு அறிவுரை பகர்ந்தார்: ஏ சித்தமே, நீ இதுவரையில் எந்தெந்தப் பொருள்களைத் தேடி அலைந்தாயோ, எந்தெந்த இன்பங்களை நாடி ஓட்டமும் பாட்டமுமாய் இருந்தாயோ, அவைகளுள் ஏதேனும் ஒன்றைப் பெற்றதில் உனக்கு உண்மையில் திருப்தி உண்டாயிற்றா? சிறிது யோசித்துப் பார்! எதனாலாவது உன் மனம் நிறைந்ததா? இதுவரையில் நடந்திருக்கும் இதுவே இனியும் நடக்குமேயல்லாது இதில் ஏதேனும் மாற்றம் இருக்குமா? ஆகையால் நீயே நன்கு யோசித்து, இந்த சுகங்களைத் தேடி அலைவதனால் சிறிதும் லாபம் இல்லை என்பதை உணர்ந்துகொள். இவைகளினால் உனக்கு ஒருபொழுதும் நிம்மதி ஏற்படப் போவதில்லை.

இவ்வாறு திரும்பத் திரும்ப எண்ணிக்கொண்டே இருந்தமையால் அவர் சித்தம் அடங்கிவிட்டது; அவருக்கு மன அமைதி வந்துவிட்டது; அவர் மனத்திலிருந்து சுகபோகங்களின் ஆசை நீங்கிவிட்டது; அவர் அமைதியை அனுபவிக்கவும், இன்பம் நுகரவும் ஆரம்பித்து விட்டார்; ஜீவன் முக்தராக ஆகிவிட்டார். எல்லோரையும்போல எல்லாக் காரியங்களையும் செய்துகொண்டிருந்த அவருக்கு எதிலுமே பற்று இருக்கவில்லை.

ஜீவன் முக்தர் யார்? (8)

ந ஸுகாய ஸுகம் யஸ்யதுகம் து:காய யஸ்ய நோ ।
அந்தர்முகமதேர்நித்யம் ஸ முக்த இதி கத்யதே ॥
(யோ. வா. 6–2, 169, 1)

எவனுக்கு இன்பத்தினால் இன்பமும் துன்பத்தினால் துன்பமும் தோன்றுவதில்லையோ, எவனது சித்தத்தின் போக்கு புறநோக்குடையதா யிராமல் அகத்தில் திரும்பி யிருக்கிறதோ அவனே ஜீவன் முக்தன் எனப்படுவான்.

அனுத்வேகராசாரா பாந்தவா நாகரா இவ ।
பஹி: ஸர்வஸமாசாரா அந்த: ஸர்வார்த்தசீதலா: ॥
(யோ. வா. 6–2, 98, 5)

ஜீவன் முக்தர்கள் பிற குடிமக்களைப் போலவே ஆவேசம் ஊட்டும் செயல்களில் இறங்காமலும், எல்லோருக்கும் நண்பர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் வெளிப் பார்வைக்கு ஏதோ காரியங்களில் கிடந்து உழலுவதாகத் தோன்றினாலும் உள்ளத்தில் மிகுந்த அமைதியோடு இருந்து வருவார்கள்.

ஆபத்ஸு ச யதாகாலம் ஸுகது: கேஷ்வனாரதம் ।
ந ஹ்ருஷ்யதி க்லாயதி ய: ஸ முக்த இதி கத்யதே ॥
(யோ. வா. 5, 16, 28)

அவ்வப்போது விபத்துக்கள் வந்துகொண்டிருந்தும், இன்பத்திலும் துன்பத்திலும் ஒரேவிதமாக களிக்

न सुखाय सुखं यस्य दु:खं दु:खाय यस्य नो ।
अन्तर्मुखमतेर्नित्यं स मुक्त इति कथ्यते ॥

अनुद्वेगकराचारा बान्धवा नागरा इव ।
बहि: सर्वसमाचारा अन्त: सर्वार्थशीतला: ॥

आपत्सु च यथाकालं सुखदु:खेष्वनारतम् ।
न हृष्यति ग्लायति य: स मुक्त इति कथ्यते ॥

கூத்தாடாமலும் அழுது அரற்ருமலும் இருப்பவர்கள் ஜிவன்முக்தர் எனப்படுவர்.

ந ஸ சேதயதே காச்சில்லோகதாரதனைஷணுஃ ।
அபூர்வபதவிச்ராந்தோ ஜிவன்னேவ யதா சவஃ ॥
(யோ. வா. 6-2, 45, 17)

அவர் மனதில் பணத்தில் பற்ருே, பெண்ணிடம் மோகமோ இருப்பதில்லை. அவர் அபூர்வமான, அற்புத மான மன அமைதியோடு திகழ்வார்; உயிர் வாழ்ந்து கொண்டிருந்தும் உணர்ச்சியில்லாத பிணம்போலிருப் பார்.

ஹர்ஷாமர்ஷபயக்ரோத காமகார்ப்பண்யத்ருஷ்டிபிஃ ।
ந பராம்ருச்யதே யோ஽ந்தஃ ஸ ஜிவன்முக்த உச்யதேஃ ॥
(யோ. வா. 5, 16, 21)

எவர் இன்பத்திஞல் மகிழ்வதோ துன்பத்திஞல் துயருறுவதோ இல்லையோ, எவருக்கு எதனிடமும் அச்சமில்லையோ, எவர் எதையும் விரும்புவதோ எவரிடமும் கோபிப்பதோ இல்லையோ கஞ்சத்தனம் முதலியவை எவரை பாதிப்பதில்லையோ அவரே ஜீவன் முக்தர் எனப்படுவார்.

ந கதாசன தீனுத்மா நோத்ததாத்மா கதாசன ।
நப்ரமத்தோ ந கின்னுத்மா நோத்விக்னே ந ச ஹர்ஷவான் ॥
(யோ. வா. 5, 77, 32)

न स चेतयते काश्चिल्लोकदारधनैषणाः ।
अपूर्वपदविश्रान्तो जीवन्नेव यथा शवः ॥

हर्षामर्षभयक्रोधकामकार्पण्यदृष्टिभिः ।
न परामृश्यते योऽन्तः स जीवन्मुक्त उच्यते ॥

न कदाचन दीनात्मा नोद्धतात्मा कदाचन ।
न प्रमत्तो न खिन्नात्मा नोद्विग्नो न च हर्षवान् ॥

அவர் எவரிடமும் பணிந்து கெஞ்சவோ திமிர்தண்டமாக நடந்துகொள்ளவோ மாட்டார். அவர் ஒருபொழுதும் மதம்பிடித்து அலேவதோ, துயருற்று அழுவதோ கிடையாது. அவர் மிகவும் பரபரப்படைவதோ பெருவகையுறுவதோ இல்லே.

யஃ குர்வன்ஸர்வகார்யாணி புஷ்டே நஷ்டேऽத தத்பலே ।
ஸமஃ ஸன்ஸர்வகார்யேஷு ந துஷ்யதி ந சோசதி ॥

(யோ. வா. 5, 6, 10)

அவர் எல்லாக் காரியங்களேயும் செய்துகொண்டிருந்தாலும் ஒரு காரியம் கை கூடியதனுல் மகிழ்வதோ இன்னென்று கெட்டுப்போனமையால் வருந்துவதோ கிடையாது. அவர் எதைக் குறித்தும் கவலேயுறுவதில்லே. அவர் எப்பொழுதும் எல்லாக் காரியங்களிலும் பதற்றமின்றி சமநிலேயிலிருந்துவருவார்.

ஆத்மாராமதயா தாம்ஸ்து ஸுகயந்தி ந காச்சன ।
ஜகத்க்ரியாஃ ஸுஸம்ஸுப்தான்ரூபாலோகாஃஸ்த்ரியோ யதா॥

(யோ. வா. 3, 118, 20)

ஜீவன்முக்தர் தன்னில் தானே—தன் ஆன்மாவிலேயே திருப்தியோடிருப்பார். உறக்கத்திலிருப்பவனே வனப்புமிக்க பெண்ணின் கவர்ச்சி பாதிக்காததைப் போல அவருக்கு உலகின் எந்த விவகாரமும் எத்தகைய இன்பமோ துன்பமோ அளிப்பதில்லே.

यः कुर्वन्सर्वकार्याणि पुष्टे नष्टेऽथ तत्फले ।
समः सन्सर्वकार्येषु न तुष्यति न शोचति ॥

आत्मारामतया तांस्तु सुखयन्ति न काश्चन ।
जगत्क्रियाः सुसंसुप्तान्रूपालोकाः स्त्रियो यथा ॥

நோதேதி நாஸ்தமாயாதி ஸுகே து:கே முகப்ரபா ।
யதா ப்ராப்தஸ்திதேர்யஸ்ய ஜீவன்முக்த: ஸ உச்யதே ॥
(யோ. வா. 3, 9, 6)

இன்பத்திலும் துன்பத்திலும் சிறிதும் மாறுபடாமல் அவர் முகம் எப்பொழுதும்போல் இருந்துவரும். மகிழ்ச்சியினால் அவர் முகம் மலருவதோ, துன்பம் வரும் போது அது வாடிப்போவதோ இல்லை. கிடைத்ததைக் கொண்டு அவர் திருப்தியாயிருப்பார். இவ்வாறு இருப்பவரே ஜீவன்முக்தர் எனப்படுவார்.

ராணி சுடாலை : (9)

சிகித்வஜன் என்ற வீரப்பிரதாபியான அரசனின் பட்டமகிஷி சுடாலை. உலக போகங்களை வெகுகாலம் அனுபவித்ததில் அந்த அரசனுக்கு, ' இது உண்மையான சுகமல்ல. உண்மையான சுகத்தைத் தேடிப் பெற வேண்டும் ' என்று தோன்றிவிட்டது. அறிஞர்களான வித்துவான்களை விசாரித்ததில் அவர்கள் உண்மையான சுகம் ஆன்மஞானத்தினால்தான் கிடைக்குமென்று சொன்னார்கள். அரசனும் அரசியும்—இருவருமே ஆன்மஞானம் பெறுவதென்று முடிவு செய்தார்கள்.

ராணி நல்ல அறிவாளி. அவளுக்கு விரைவில் ஆன்மஞானம் வந்துவிட்டது. இதனால் அவள் எப்பொழுதும் மகிழ்ச்சியோடிருக்கலானாள். அவளுக்கு உலகம் முழுதும் இன்பமயமாகத் தோன்ற ஆரம்பித்து விட்டது.

சுடாலை அரசனுக்கு ஆன்மஞானம் பெறுவதில் உதவ விரும்பியும் அவன் அதை ஏற்க மறுத்துவிட்டான். ' போயும் போயும் ஒரு பெண்ணிடம் உபதேசம் பெறுவதாவது !' என்று எண்ணிக்கொண்டான்.

नोदेति नास्तमायाति सुखे दु:खे मुखप्रभा ।
यथा प्राप्तस्थितेर्यस्य जीवन्मुक्त: स उच्यते ॥

பிறகு அவன் தானே எவ்வளவோ முயன்றும் அவனுக்கு ஆன்மஞானம் கிட்டவில்லை. அப்போது ஒரு நாளிரவில் எவருக்கும் தெரியாமல் அரண்மனையை விட்டு வெளியேறி காட்டை நோக்கி நடக்கலானான்.

அப்போது சுடாலையே அரசாங்க காரியங்களை நடத்தி வந்தாள். யோகப் பயிற்சியினால் அவள் சில சித்திகளும் பெற்றிருந்தாள். அவற்றின் உதவியால் அவள் ஒரு நாள் காட்டில் தனியேயிருந்த அரசனிடம் போய்ச் சேர்ந்தாள். ஆனால் அப்பொழுது அவள் தன் உருவை ஓர் இளைஞனின் உருவில் மாற்றிக்கொண்டு பெயரையும் கும்பஜன் என்று வைத்துக் கொண்டிருந்தாள்.



சிகித்வஜனுக்கு கும்பஜனாக இருந்த சுடாலை ஆன்ம ஞானம் பெறுவதற்குதவும் பல வழிகளை சொல்லிக் கொடுத்தாள். அவை அரசனுக்கு பெரிதும் உதவினமையால் அவன் சிறிது சிறிதாக ஞானமார்க்கத்தில் முன்னேறலானான். இறுதியில் அவனும் ஆன்மஞானம் பெற்றுவிடவே, ஆனந்தத்தில் மூழ்கித்திளைக்கலானான்.

அப்போது சுடாலே அவனே சோதிப்பதற்காக தன் ஆணுருவைப் பெண்ணுருவுக்கு மாற்றிக்கொண்டு, மதனிகை என்ற பெயரோடு அவன் முன் தோன்றி, அவனே மணந்துகொண்டு அவனுடன் வாழலானுள்.

ஒரு நாள் சுடாலே தன் யோகபலத்திஞல் ஓர் இளேஞனைப் படைத்தாள். அன்று மாலேயில் ஆற்றில் மாலே வழிபாடு முடித்துக்கொண்டு தன் பர்ணசாலேக்குத் திரும்பிய அரசன் அங்கே மதனிகை ஓர் இளேஞனுடன் அமர்ந்திருப்பதைக் கண்டான். ஆஞல் அவனுக்குச் சிறிதும் கோபம் வரவில்லே. மதனிகை அவனிடம் தன்னே மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டதற்கும், அவன், 'என்ன ஆகிவிட்டது? ஒன்றுமில்லேயே! நாம் இப்போது நண்பர்களேப்போல் வாழ்கிருேமே தவிர கணவன் மனேவியாக அல்லவே' என்று சொல்லித் தேற்றிஞன்.

அப்போது சுடாலே தன் உண்மை உருவில் அரசன் முன் தோன்றவே அவனுக்கு மிகுந்த திருப்தி உண்டாயிற்று.

வசிட்ட முனிவர் ராமசந்திரனுக்கு இந்தக் கதையைச் சொல்லவும் ஸ்ரீராமன் அதைக் கேட்டு மிகுந்த மகிழ்ச்சியுற்ருர்.

வசிட்டர்: குழந்தாய், நற்குலத்தில் தோன்றிய பெண்கள் தம் கணவரையும் சம்சார சாகரத்திலிருந்து கரையேற்றிவிடுகிருர்கள்.

சாஸ்த்ரார்த்தகுருமந்த்ராதி ததா நோத்தாரண க்ஷமம் ।
யதைதா: ஸ்னேஹசாலின்யோ பர்த்ருணும் குலயோஷித: ॥

நமக்கு சாஸ்திரங்களும் குருவும் மந்திரம் முதலிய சாதனங்களும், சம்சாரமென்ற மோஹசாகரத்தைக்

शास्त्रार्थगुरुमन्त्रादि तथा नोत्तारणक्षमम् ।
यथैता: स्नेहशालिन्यो भर्तृणां कुलयोषित: ॥

கடப்பதற்கு பேரன்புள்ள குலஸ்திரீகளின் அளவு உதவமாட்டா.

> ஸகா ப்ராதா ஸுஹ்ருத் ப்ருத்யோ
> குருர்மித்ரம் தனம் ஸுகம் ।
> சாஸ்த்ரமாயதனம் தாஸஃ
> ஸர்வம் பர்த்துஃ குலாங்கனா ॥

குலஸ்திரீகள் தம் கணவருக்கு உற்ற நண்பராகவும், மிகவும் வேண்டியவராகவும், அன்பராகவும், தொண்டராகவும், ஆசிரியராகவுமிருந்து உதவுவார்கள். அவர்களே கணவருக்குப் பணமாகவும் பொருளாகவும் இன்பமாகவும் சாஸ்திரமாகவும் வீடுவாயிலாகவும் ஊழியராகவும் எல்லாமாகவும் இருப்பார்கள்.

> ஸர்வதா ஸர்வயத்னேன பூஜனீயாஃ குலாங்கனாஃ ।
> லோகத்வயஸுகம் ஸம்யக் ஸர்வம் யாஸு ப்ரதிஷ்டிதம் ।

இதைப் புரிந்துகொண்டு எப்பொழுதும், எல்லா வகையிலும் அவர்களைப் போற்றிக் கொண்டாட வேண்டும். இகத்திலும் பரத்திலும் நாம் இன்பம் பெறுவது முழுக்க முழுக்க அவர்களையே பொறுத்திருக்கிறது.

2. மகா பாரதம்

மகாபாரதத்தில் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்குமிடையே நடந்த மாபெரும் போர் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

सखा भ्राता सुहृद् भृत्यो गुरुर्मित्रं धनं सुखम् ।
शास्त्रमायतनं दासः सर्वं भर्तुः कुलाङ्गना ।

सर्वदा सर्वयत्नेन पूजनीयाः कुलाङ्गनाः ।
लोकद्वयसुखं सम्यक् सर्वं यासु प्रतिष्ठितम् ॥

ஆனால் இந்த மகாபாரதப் போர்தான் தினமும் நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் நடந்துகொண்டிருக்கிறதே.

மகாபாரதத்தை இயற்றியவர், மகாபாரதக் கதையைச் சொல்லும் சாக்கில் நமக்கு தர்மம் தவருது நியாய மார்க்கத்தில் இருந்துகொண்டு வாழ்வதனுல் எவ்வாறு வாழ்க்கையில் வெற்றிபெற முடிகிறது என்பதை பல வகைகளில் எடுத்துச் சொல்லியிருக்கிருர்.

யதோ தர்மஸ்ததோ ஜயः ।

தர்மமுள்ள இடத்தில் வெற்றி இருக்கும்.

தர்மத்தின் இலட்சணங்கள் (1)

யः ஸ்யாதஹிம்ஸாஸம்யுக்தः ஸ தர்ம இதி நிச்சயः ।

(மகாபாரதம், சாந்தி. ப. 109, 12)

எதில் அஹிம்சை இடம் பெறுகிறதோ அதுவே தர்மம் என்பது தர்மாத்மாக்களான பெரியோர்களின் முடிவாகும்.

அஹிம்ஸா ஸத்யமக்ரோதः தபோ தானம் தமோ மதிः ।
அனஸூயோப்யமாத்ஸர்யமனிர்ஷ்யா சீலமேவ ச ।
ஏஷ தர்மः குருச்ரேஷ்ட கதிதः பரமேஷ்டினு ॥

(ம. பா. 109, 12)

அஹிம்சை, சத்தியம், குரோதம் இன்மை, தவம் இயற்றுதல், தானம் செய்தல், மனத்தையும் இந்திரியங்களையும் அடக்குதல், தெளிந்த அறிவு, எவரிடமும் குறை காணுமை, எவரிடமும் பொருமையின்மை, மிகவும் சிறந்த

यतो धर्मस्ततो जयः ।

यः स्यादहिंसासंयुक्तः स धर्म इति निश्चयः ।

अहिंसा सत्यमक्रोधः तपो दानं दमो मतिः ।
अनसूयाप्यमात्सर्यमनीर्ष्या शीलमेव च ।
एष धर्मः कुरुश्रेष्ठ कथितः परमेष्ठिना ॥

சீலம் ஆகியவையே தர்மம் என்று பிரம்மா புகன்றிருக்கிறார்.

அக்ரோத: ஸத்யவசனம் ஸம்விபாக: க்ஷமா ததா ।
ப்ரஜனம் ஸ்வேஷு தாரேஷு சௌசமத்ரோஹ ஏவ ச ।
ஆர்ஜவம் ப்ருத்யபரணம் நவைதே ஸார்வவர்ணிகா: ॥
(ம. பா. சா. 60, 7-8)

எவரையும் கோபியாமை, உண்மை பேசுதல், செல்வத்தை பலருக்கும் பகிர்ந்தளித்து அனுபவித்தல், பிறர் குற்றங்களை மன்னித்தல், தன் இல்லாளோடு மட்டுமே கூடுதல், அகத்திலும் புறத்திலும் தூய்மையோடிருத்தல், எவரிடமும் பகைமை பாராட்டாமை, கள்ளம் கபடமின்மை, நம் ஆதரவை நம்பி இருப்பவர்களை போஷித்துப் பாதுகாத்தல் என்ற இவை ஒன்பதும் எல்லா வர்ணத்தாருக்கும் பொதுவான தர்மங்கள்.

த்வ்யக்ஷரஸ்து பவேன்ம்ருத்யுஸ்
த்ரயக்ஷரம் ப்ரஹ்ம சாச்வதம் ।
மமேதி ச பவேன்ம்ருத்யுர்
ந மமேதி ச சாச்வதம் ॥
(ம. பா. சா. 13, 4)

'மம' (என்னுடையது) என்ற இரண்டு எழுத்துக்களினால் ஆன சொல் சாவையும், 'நமம' (என்னுடையதன்று) என்ற மூன்று எழுத்துக்களினாலான சொல் சாகா நிலையையும் குறிக்கும். சநாதனமான—என்றும் உள்ள பிரம்மம் இதுவே.

अक्रोधः सत्यवचनं संविभागः क्षमा तथा ।
प्रजनं स्वेषु दारेषु शौचमद्रोह एव च ।
आर्जवं भृत्यभरणं नवैते सार्ववर्णिकाः ॥

द्व्यक्षरस्तु भवेन्मृत्युस्त्र्यक्षरं ब्रह्म शाश्वतम् ।
ममेति च भवेन्मृत्युर्न ममेति च शाश्वतम् ॥

'என்னுடையது, என்னுடையது' என்பது நம்மை அழிக்கவும், 'என்னுடையதன்று' என்பது நம்மைக் கரையேற்றவும் செய்கிறது என்பது கருத்து.

ஸுக்ருதஸ்ய ஹி ஸாந்த்வஸ்ய ச்லக்ஷ்ணஸ்ய மதுரஸ்ய ச ।
ஸம்யகாஸேவ்யமானஸ்ய துல்யம் ஜாது ந வித்யதே ॥
(ம. பா. சா. 85, 10)

நாம் மிகவும் இனிய, அன்பும் ஆதரவும் அளிக்கும் சொற்களையே பேசுவது, அவைகளைத் தவிர வேறு எதையும் உபயோகிப்பதில்லையென்று இருந்தால் நமக்கு வேறு எதுவுமே தேவை இல்லை.

ப்ரத்யக்ஷம் குணவாதீ யஃ பரோக்ஷே சாபி நிந்தகஃ ।
ஸ மானவஃ ச்வவல்லோகே நஷ்டலோகபராவரஃ ॥
(ம. பா. சா. 139, 42)

ஆளைக் கண்டதும் புகழ்வதும் இனிக்க இனிக்கப் பேசுவதுமாய் இருந்து, தலை மறைந்ததும் நிந்திக்கிறானே அவனை நாயைப் போன்றவன் என்றே சொல்லவேண்டும். அவனுக்கு இவ்வுலகிலும் நல்வாழ்வில்லை; பரலோகத்திலும் அவன் நரகம்தான் சேருவான்.

அஹிம்சையே தலைசிறந்த தர்மம் (2)

அஹிம்ஸா பரமோ தர்மஸ்ததாऽஹிம்ஸா பரம் தபஃ ।
அஹிம்ஸா பரமம் ஸத்யம் ததோ தர்மஃ ப்ரவர்த்ததே ॥
(ம. பா. அனு. 115, 23)

सुकृतस्य हि सान्त्वस्य श्लक्ष्णस्य मधुरस्य च ।
सम्यगासेव्यमानस्य तुल्यं जातु न विद्यते ॥

प्रत्यक्षं गुणवादी यः परोक्षे चापि निन्दकः ।
स मानवः श्ववल्लोके नष्टलोकपरावरः ।

अहिंसा परमो धर्मस्तथाऽहिंसा परं तपः ।
अहिंसा परमं सत्यं ततो धर्मः प्रवर्तते ॥

அஹிம்சையினுலேயே நாம் தர்ம வழியில் செல்லு மாறு ஏவப்படுவதால் அஹிம்சையே தலையாய தர்மமும், சிறந்த தவமும், பேருண்மையும் ஆகும்.

அஹிம்ஸா பரமோ தர்மஃ
ஸர்வப்ராணப்ருதாம் வர ।
தஸ்மாத் ப்ராணப்ருதஃ ஸர்வான்
ந ஹிம்ஸ்யான்மானுஷஃ க்வசித் ॥

(ம. பா. ஆதி. 11, 13–14)

அஹிம்சை தலைசிறந்த தர்மமாகும். ஆகையால் மனிதன் ஒருபொழுதும் எங்குமே, எந்த உயிருக்குமே ஹிம்சை புரியக்கூடாது.

ந ஹிம்ஸ்யாத் ஸர்வபூதானி மைத்ராயணகதச்சரேத் ।
நேதம் ஜீவிதமாஸாத்ய வைரம் குர்வீத கேனசித் ॥

(ம. பா. சாந்தி. 278, 5)

எவரும் எந்தப் பிராணிக்கும் ஹிம்சை புரியவோ, எதற்கும் துன்பம் விளைவிக்கவோ வேண்டாம். எல்லோரும் எல்லா உயிர்களிடமும் நட்புறவுடன் வளையவரட்டும். இந்த நிலையில்லாத வாழ்க்கையில் எவரிடமும் பகைமை கொள்ளவேண்டாம்.

ந ஹி ப்ராணுத் ப்ரியதரம் லோகே கிஞ்சன வித்யதே ।
தஸ்மாத் தயாம் நரஃ குர்யாத் யதாத்மனி ததா பரே ॥

(ம. பா. அனு. 116, 8)

अहिंसा परमो धर्मः सर्वप्राणभृतां वर ।
तस्मात् प्राणभृतः सर्वान् न हिंस्यान्मानुषः क्वचित् ॥

न हिंस्यात् सर्वभूतानि मैत्रायणगतश्चरेत् ।
नेदं जीवितमासाद्य वैरं कुर्वीत केनचित् ॥

न हि प्राणात् प्रियतरं लोके किञ्चन विद्यते ।
तस्माद् दयां नरः कुर्यात् यथात्मनि तथा परे ॥

உலகத்தில் எல்லோருக்கும் தம் உயிரைவிட பிரியமானது வேறில்லை. ஆகையால் மனிதன் தன்னிடம் எல்லோரும் தயை செய்யவேண்டும் என்று விரும்புவதைப் போலவே அவனும் பிறரிடம் தயை காட்ட வேண்டும்.

அபயம் ஸர்வபூதேப்யோ யோ ததாதி தயாபார: ।
அபயம் தஸ்ய பூதானி தததீத்யனுசுச்ரும ॥
(ம. பா. அனு. 116, 13)

தயாளுவான எந்த மனிதன் எல்லா உயிர்களுக்கும் அபயமளிக்கிறானோ அவனுக்கு எல்லாப் பிராணிகளும் அபயம் அளிக்கின்றன.

ந பக்ஷயதி யோ மாம்ஸம் ந ச ஹன்யாந்ந காதயேத் ।
தம் மித்ரம் ஸர்வபூதானும் மனு: ஸ்வாயம்புவோऽப்ரவீத் ॥
(ம. பா. அனு. 115, 10)

'எந்த மனிதன் புலால் உண்ணாமலும், எந்தப் பிராணிக்கும் ஹிம்சை புரியாமலும், பிறரை ஹிம்சை புரியத் தூண்டாமலுமிருக்கிறானோ அவன் எல்லோருக்கும் நண்பனுயிருப்பான்' என்பது ஸ்வாயம்புவ மனுவின் வாக்கு.

ஸர்வ பூதேஷு யோ வித்வான் ததாத்யபயதக்ஷிணும் ।
தாதா பவதி லோகே ஸ ப்ராணுனும் நாத்ர ஸம்சய: ।
(ம. பா. அனு. 115, 18)

अभयं सर्वभूतेभ्यो यो ददाति दयापरः।
अभयं तस्य भूतानि ददतीत्यनुशुश्रुम ॥

न भक्षयति यो मांसं न च हन्यान्न घातयेत्।
तं मित्रं सर्वभूतानां मनुः स्वायम्भुवोऽब्रवीत् ॥

सर्वभूतेषु यो विद्वान् ददात्यभयदक्षिणाम्।
दाता भवति लोके स प्राणानां नात्र संशयः ॥

எந்த வித்துவான் (அறிஞன்) எல்லா உயிர்களுக்கும் அபயமளிக்கிருனே அவன் உலகிலேயே பெருங் கொடையாளன், உயிர் அளித்தவன் என்று போற்றப்படுவான் என்பதில் ஐயமில்லை.

ப்ராணு யதாத்மனே஽பிஷ்டா: பூதாநாமபி வை ததா ।
ஆத்மௌபம்யேன கந்தவ்யம் புத்திமத்பிர்மஹாத்மபி: ॥
(ம. பா. அனு. 115, 19, 20)

மனிதனுக்கு தன் உயிர் வெல்லமாயிருப்பதைப் போலவே எல்லா உயிர்களுக்கும் தம் உயிர் என்ருல் மிகவும் பிரியம்தான். ஆகையால் அறிவாளிகளும், புண்ணியாத்மாக்களும் மன்னுயிரைத் தன்னுயிர்போல் மதித்தல் அவசியமாகும்.

வைரம் பஞ்சஸமுத்தானம் தச்ச புத்யந்தி பண்டிதா: ।
ஸ்திரீக்ருதம் வாஸ்துஜம் வாக்ஜம் ஸஸாபத்ன்யாபராதஜம் ॥
(ம. பா. சாந்தி. 139, 142)

ஏ அரசனே, பகை மூள்வது பின்வரும் ஐந்து காரணங்களினுல் என்பது அறிவாளிக்கு நன்கு தெரியும்: (1) பெண்டிர்; (2) வீடு, நிலம் ஆகியவை; (3) கடுஞ்சொல்; (4) சாதிசமய துவேஷம்; (5) எப்பொழுதோ செய்த பிழை.

ப்ரத்யாஹுர்ந்நேச்யமாணு யே ந ஹிம்ஸந்தி ச ஹிம்ஸிதா: ।
ப்ராயச்சந்தி ந யாசந்தே துர்காண்யதிதரந்தி தே ॥
(ம. பா. சாந்தி. 110, 4)

प्राणा यथात्मनोऽभीष्टाः भूतानामपि वै तथा ।
आत्मौपम्येन गन्तव्यं बुद्धिमद्भिर्महात्मभिः ।

वैरं पञ्चसमुत्थानं तच्च बुद्ध्यन्ति पण्डिताः ।
स्त्रीकृतं वास्तुजं वाग्जं ससापत्न्यापराधजम् ॥

प्रत्याहुर्नोच्यमाना ये न हिंसन्ति च हिंसिताः ।
प्रायच्छन्ति न याचन्ते दुर्गाण्यतितरन्ति ते ॥

பிறர் தம்மை தூஷித்தாலும், வசைமொழி பேசினுலும் பதில் சொல்லாமலும், பிறர் தம்மை அடித்தாலும் திருப்பி அடியாமலும், தாம் பிறருக்கு தானமளிப்பதோடிருந்து, பிறர்முன் கை நீட்டி யாசிக்காமலும் இருப்பவர்கள் பேராபத்துக்களிலிருந்து தப்புவார்கள்.

சத்தியத்தை ஒத்த தர்மம் வேறில்லை: (3)

அவிகாரிதமம் ஸத்யம் ஸர்வவர்ணேஷு பாரத ।
ஸத்யம் ஸத்ஸு ஸதா தர்ம: ஸத்யம் தர்ம: ஸநாதன: ॥
(ம. பா. சாந்தி. 162, 3–4)

விகாரக் கலப்பு சிறிதும் இல்லாத சத்தியம் எல்லா வர்ணத்தாருக்கும் ஒருங்கே உரிய தர்மமாகும். சத்புருஷர்கள் எப்பொழுதும் சத்தியம் என்ற தர்மத்தை அனுஷ்டித்து வந்திருக்கிறுர்கள். சத்தியமே என்றும் உள்ள தர்மம்.

ஸத்யம் யக்ஞ: பரம் ப்ரோக்த: ஸர்வம் ஸத்யே ப்ரதிஷ்டிதம்।
(ம. பா. சாந்தி. 162, 5)

சத்தியமே மிகவும் பெரிய, உயர்ந்த யக்ஞம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எல்லாமே நிலைத்திருப்பது சத்தியத்தின் மீதுதான்.

நாஸ்தி ஸத்யாத்பரோ தர்ம: நாந்ருதாத்பாதகம் பரம் ।
ஸ்திதிர்ஹி ஸத்யம் தர்மஸ்ய தஸ்மாத் ஸத்யம்நலோபயேத் ॥
(ம. பா. சாந்தி. 162, 24)

अविकारितमं सत्यं सर्ववर्णेषु भारत ।
सत्यं सत्सु सदा धर्मः सत्यं धर्मः सनातनः ॥

सत्यं यज्ञः परं प्रोक्तः सर्वं सत्ये प्रतिष्ठितम् ।

नास्ति सत्यात्परो धर्मः नानृतात्पातकं परम् ।
स्थितिर्हि सत्यं धर्मस्य तस्मात् सत्यं न लोपयेत् ॥

சத்தியத்தினும் சிறந்த, உயர்ந்த தர்மம் வேறில்லை. பொய்யைவிட மோசமான, இழிந்த பாவமும் கிடையாது. சத்தியமே தர்மத்தின் ஆதாரம். ஆகையால் சத்தியத்தை மறைய விடாதீர்கள்.

ஸத்யம் ச ஸமதா சைவ தமச்சைவ ந ஸம்சய: ।
அமாத்ஸர்யம் க்ஷமா சைவ ஹ்ரீஸ்திதிக்ஷாऽநஸூயதா ॥
த்யாகோ த்யானமதார்யத்வம் த்ருதிச்ச ஸததம் ஸ்திரா ॥
அஹிம்ஸா சைவ ராஜேந்த்ர ஸத்யாகாராஸ்த்ரயோதச ॥
(ம. பா. சாந்தி. 162, 8–9)

ஏ ராஜேந்திரா, இந்தப் பின்வரும் 13 உருவங்களில் சத்தியம் விளங்குகிறது: சத்தியம், சமத்துவம், புலனடக்கம், துவேஷமின்மை, பொறை, நாணம், சகிப்புத் தன்மை, பிறர் குறைகளைக் காணாமை, சிற்றின்பங்களில் ஆசையின்மை, பரம்பொருளின் தியானம், சீரிய நடத்தை, நிலைத்த தைரியம், அஹிம்சை.

பேராசையே பாவங்களுக்குக் காரணம் : (4)

அத்யாகச்சாதிதர்ஷச்ச விகர்மஸு ச யா க்ரியா: ॥
குலவித்யாமதச்சைவ ரூபைச்வர்யமதஸ்ததா ।
ஸர்வபூதேஷ்வபித்ரோஹ: ஸர்வபூதேஷ்வஸத்க்ருதி: ।
ஸர்வபூதேஷ்வவிச்வாஸ: ஸர்வபூதேஷ்வநார்ஜவம் ॥
(ம. பா. சாந்தி. 158, 6–7)

सत्यं च समता चैव दमश्चैव न संशयः ।
अमात्सर्यं क्षमा चैव ह्रीस्तितिक्षाऽनसूयता ॥
त्यागो ध्यानमथार्यत्वं धृतिश्च सततं स्थिरा ।
अहिंसा चैव राजेन्द्र सत्याकारास्त्रयोदश ॥

अत्यागश्चातितर्षश्च विकर्मसु च या क्रियाः ।
कुलविद्यामदश्चैव रूपैश्वर्यमदस्तथा ॥
सर्वभूतेष्वभिद्रोहः सर्वभूतेष्वसत्कृतिः ।
सर्वभूतेष्वविश्वासः सर्वभूतेष्वनार्जवम् ॥

பேராசையினுலேயே மனிதன் கருமியாகிருன். அவனுடைய ஆசை மிகவும் பெருகி விடுகிறது. அவன் செய்யத்தகாத காரியங்களைச் செய்யத் தொடங்குகிருன். தன் குலத்தையும், கல்வியையும், அழகையும் செல்வத்தையும் எண்ணி தனக்கு நிகர் யாருமில்லை என்று நினைத்துக் கொள்கிருன். அவனுக்கு எவரையும் ஆகாது போய் விடுகிறது. அவன் எல்லோரையுமே அலட்சியம் செய்கிருன். எல்லோரிடமும் அவநம்பிக்கை வந்து விடுவதால் அவனுக்கு எவரிடமும் நேர்மையாக நடக்கத் தெரிவதில்லை.

லோபாத் க்ரோத: ப்ரபவதி லோபாத் காம: ப்ரவர்த்ததே ।
லோபான்மோஹச்ச மாயா ச மான: ஸ்தம்ப: பராஸுதா ।

(ம. பா. சாந்தி. 158, 4)

லோபம் அல்லது பேராசையிலிருந்து கோபம் பிறக்கிறது. லோபத்திலிருந்தே காமம் உண்டாகிறது. லோபத்திலிருந்தே மோகம், மாயை, அபிமானம், முரட்டுத்தனம், பிறருக்கு அடங்குதல் ஆகிய குற்றங்கள் விளைகின்றன.

ஸ லோப: ஸஹ மோஹேன விஜேதவ்யோ ஜிதாத்மனா ।
தம்போ த்ரோஹச்ச நிந்தா ச பைசுன்யம் மத்ஸரஸ்ததா ।
பவந்த்யேதானி கௌரவ்ய லுப்தானாமக்ருதாத்மனாம் ।

(ம. பா. சாந்தி. 158, 15–16)

தன்னை வென்றவன் மோகத்தோடு பேராசையையும் களைந்து விடவேண்டும். ஏ குருநந்தன, தற்பெருமை,

---

लोभात् क्रोधः प्रभवति लोभात् कामः प्रवर्तते ।
लोभान्मोहश्च माया च मानः स्तम्भः परासुता ॥

स लोभः सह मोहेन विजेतव्यो जितात्मना ।
दम्भो द्रोहश्च निन्दा च पैशुन्यं मत्सरस्तथा ।
भवन्त्येतानि कौरव्य लुब्धानामकृतात्मनाम् ॥

துரோகம், நிந்தை, கோள்சொல்லுதல், துவேஷம் முதலிய குறைகள் தன்னை வெல்லாத, பேராசையுள்ள மனிதர் களிடமே காணப்படுகின்றன.

பாபஸ்ய யததிஷ்டானம் தச்ச்ருணுஷ்வ நராதிப ।
ஏகோ லோபோ மஹாக்ராஹோ லோ
பாத்பாபம் ப்ரவர்த்ததே॥ (ம. பா. சாந்தி. 158, 2)

ஏ அரசனே, பேராசை என்ற ஒன்றிலிருந்தே எல்லாப் பாவங்களும் தோன்றுகின்றன. அது மனிதனையே விழுங்கித் தீர்க்ககூடிய மிகவும் கொடிய முதலை. பேராசையினுல்தான் நமக்கு பாவத்திலேயே புத்தி செல்கிறது.

யே வித்தம பிபத்யந்தே ஸம்யக்த்வம் தேஷு துர்லபம் ।
த்ருஹ்யத: ப்ரைதி தத்ப்ராஹு: ப்ரதிகூலம் யதாததம் ॥
(ம. பா. சாந்தி. 26, 20)

பணத்திலேயே கருத்தாயிருப்பவர்கள் நல்லவர்களா யிருப்பது அரிது. ஏனெனில் பிறரை மோசம் செய்பவர் களிடமே பணம் சேருகிறது என்றும், அவ்வாறு சேர்ந்த பணமும் அவர்களுக்குத் தீங்காகவே முடிகிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

விவகாரங்களிலிருந்து விடுபடுவது எப்படி? (5)

லோபாத் க்ரோத: ப்ரபவதி பரதோஷைருதீர்யதே ।
க்ஷமயா திஷ்டதே ராஜன் க்ஷமயா வினிவர்த்ததே ॥
(ம. பா சாந்தி. 163, 7)

पापस्य यदधिष्ठानं तच्छृणुष्व नराधिप ।
एको लोभो महाग्राहो लोभात्पापं प्रवर्तते ॥
ये वित्तमपिबद्यन्ते सम्यक्त्वं तेषु दुर्लभम् ।
द्रुह्यतः प्रैति तत्प्राहुः प्रतिकूलं यथातथम् ॥
लोभात् क्रोधः प्रभवति परदोषैरुदीर्यते ।
क्षमया तिष्ठते राजन् क्षमया विनिवर्तते ॥

பேராசையிலிருந்து கோபம் உண்டாகிறது. அது பிறரிடம் குறை காண்பதனால் வளருகிறது; சகிப்பினால் அது அடங்குகிறது. சகிப்பினாலேயே அது அற்றும் போகிறது.

ஸங்கல்பாஜ்ஜாயதே காம: ஸேவ்யமானோ விவர்ததே ।
யதா ப்ராஜ்ஞோ விரமதே ததா ஸத்ய: ப்ரணச்யதி ॥
(ம. பா. சாந்தி. 163, 8)

சங்கல்பத்திலிருந்து காமம் தோன்றுகிறது. நுகர்ச்சியினால் அது வளம் பெறுகிறது. அறிவாளிகள் அதை அசட்டை செய்துவிடுகையில் அது அழிந்து போகிறது.

பராஸுதா க்ரோதலோபாதப்யாஸாச்ச ப்ரவர்த்ததே ।
தயயா ஸர்வபூதானாம் நிர்வேதாத் ஸா நிவர்த்ததே ।
அவத்யதர்சனாதேதி தத்த்வஜ்ஞானாச்ச தீமதாம் ॥
(ம. பா. சாந்தி. 163, 9–10)

கோபத்தினாலோ, பேராசையினாலோ, பழக்கத்தினாலோ பிறரைக் கொல்லும் எண்ணம் தோன்றுகிறது. எல்லா உயிர்களிடமும் தயையும், வைராக்கியமும் இருந்தால் அது விலகிவிடுகிறது. பிறரிடம் குற்றம் காண்பதனால் அது தோன்ற, உண்மை அறிவு வந்ததும் அது அழிந்து போகிறது.

सङ्कल्पाज्जायते कामः सेव्यमानो विवर्धते ।
यदा प्राज्ञो विरमते तदा सद्यः प्रणश्यति ॥

परासुता क्रोधलोभादभ्यासाच्च प्रवर्तते ।
दयया सर्वभूतानां निर्वेदात् सा निवर्तते ।
अवद्यदर्शनादेति तत्त्वज्ञानाच्च धीमताम् ॥

ஸத்யத்யாகாத்து மாத்ஸர்யமஹிதானும் ச ஸேவயா ।
ஏதத்து க்ஷீயதே தாத ஸாதூனுமுபஸேவனுத் ॥

(ம. பா. சாந்தி. 163, 15)

சத்தியத்தைப் புறக்கணிப்பதனுலும், தீயோர் சேர்க்கையினுலும் பொருமை தோன்றுகிறது. நல்லோர் பெரியோர் இணக்கமும் அவர்களுக்குச் செய்யும் பணி விடையும் அதை ஒழித்துவிடுகிறது.

ப்ரதிகர்த்தும் ந சக்தா யே பலஸ்தாயாபகாரிணே ।
அஸூயா ஜாயதே தீவ்ரா காருண்யாத் வினிவர்த்ததே ॥

(ம. பா. சாந்தி. 163, 19)

தன்னைப்பற்றி அவதூறு பேசும் பலமுள்ள மனிதனை எதிர்த்து நிற்க, அவனிடம் பழிக்குப்பழி வாங்க இயலாதவருக்கு பிறரைத்தூற்றும் துர்குணம் வந்துவிடுகிறது. தயையும் கருணையும் தோன்றியதும் இந்தக் குறைபாடு நீங்கிவிடுகிறது.

க்ருபணுன் ஸததம் த்ருஷ்ட்வா ததஃ ஸஞ்ஜாயதே க்ருபா ।
தர்மநிஷ்டாம் யதா வேத்தி ததா சாம்யதி ஸா க்ருபா ॥

(ம. பா. சாந்தி. 163, 20)

கருமிகளையே எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருப்பதனுல் நமக்கும் கருமித்தனம் வந்துவிடுகிறது. தர்ம வழியில் செல்வோரின் தாராளமான போக்கைப் பார்த்துக் கொண்டேயிருப்பதனுல் நமது கஞ்சத்தனம் விலகி விடுகிறது.

सत्यत्यागात्तु मात्सर्यमहितानां च सेवया ।
एतत्तु क्षीयते तात साधूनामुपसेवनात् ॥
प्रतिकर्तुं न शक्ता ये बलस्थायापकारिणे ।
असूया जायते तीव्रा कारुण्यात् विनिवर्तते ॥
कृपणान् सततं दृष्ट्वा ततः सञ्जायते कृपा ।
धर्मनिष्ठां यदा वेत्ति तदा शाम्यति सा कृपा ॥

சாத்துவிக தானம் : (6)

யுதிஷ்டிர மகாராஜன் அசுவமேத யாகம் செய்தார். அதில் பிராம்மணர்களுக்கும் ஏழை எளியோர் முதலியோருக்கும் மிகுதியாக தானமளித்து எல்லோரையும் மகிழ்வித்தார். இதனால் மக்களனைவரும் அவரை வாயாறப் புகழலானார்கள்.

அந்தச் சமயத்தில் ஒரு கீரி அங்கே வந்தது. அதன் கண்களில் ஒன்று நில நிறமாகவும், உடலின் ஒரு பகுதி மட்டும் தங்க மயமாகவும் இருந்தது. வந்ததும் அது மற்ற கீரிகளைப் போல் கத்தியது; பிறகு மனிதர்களைப் போலவே பேசலாயிற்று :

ஸக்துப்ரஸ்தேன வோ நாயம் யஜ்ஞஸ்துல்யோ நராதிபா: ।
உஞ்சவ்ருத்தேர்வதான்யஸ்ய குருக்ஷேத்ரநிவாஸின:॥
(ம. பா. அச்வ. 90, 7)

‘ஏ ராஜாக்களே, நீங்கள் நடத்தியிருக்கும் இந்த வேள்வியும் ஒரு வேள்வியா? இது குருட்சேத்திரத்தில் வாழும் அந்த ஏழை அந்தணன் செய்த ஒருபிடி சத்து மாவின் தானத்திற்கும் ஈடாகாதே’ என்றது.

கீரியின் வார்த்தைகளைக் கேட்டதும் யாகசாலையில் கூடியிருந்த அத்தனை பேரும் திடுக்கிட்டார்கள். அது மேலும் தொடர்ந்து,

‘சிறிது காலத்திற்கு முன் நடந்த செய்தி ஒன்று. தர்ம க்ஷேத்திரமான குருக்ஷேத்திரத்தில் ஒரு பிராம்மணர் வசித்து வந்தார். அவர் உஞ்சவிருத்தி எனப்படும் பிச்சை எடுத்து ஜீவனம் செய்துவந்தார். புரு நெல்மணிகளைப் பொறுக்கித் தின்பதைப்போல அவர் வீடு விடாய்ச் சென்று யாசகம் கேட்டு, கிடைத்ததைக்

सक्तुप्रस्थेन वो नायं यज्ञस्तुल्यो नराधिपा: ।
उञ्छवृत्तेर्वदान्यस्य कुरुक्षेत्रनिवासिन: ॥

கொண்டு குடும்பம் நடத்திவந்தார். இதனால் அவருக்கு தினமும் உணவு கிடைக்காது; சில சமயங்களில் 2, 3 நாட்கள் பட்டினி கிடக்க நேரும். உணவு கொள்ளும் நாளிலும் பிற்பகலில் வெகு நேரம் தாழ்த்தியே உணவு கொள்வார். ஒரொரு நாள் அந்த நேரத்திலும் உணவு கிடைக்காவிட்டால் பட்டினிதான்; பிறகு மறுநாள்



தான் அவருக்கு உணவு. ஒரு சமயம் நாட்டில் மிகவும் கொடிய பஞ்சம் வந்து விட்டது. அப்போது அவரும் அவர் பெண்டு பிள்ளைகளும் பல நாட்களுக்கு சிறிதும் உணவு இல்லாமல் வருந்தவேண்டி வந்தது. பிறகு ஒரு நாள் 2 ஆழாக்கு யவை என்ற தானியம் கிடைத்தது; அதை மாவாக அரைத்து நான்கு பாகமாகப் பிரித்தார். அதில் ஒரு பாகத்தைத் தன் மகனுக்கும், இன்னொரு பாகத்தை மருமகளுக்கும், இன்னொன்றைத் தம் மனைவிக்கும், எஞ்சிய கால் பாகத்தைத் தமக்குமென வைத்துக் கொண்டார்.

இவ்வாறு இருந்ததை எல்லோருமாகப் பங்கு போட்டுக்கொண்டு சாப்பிட ஆரம்பிக்க இருந்த சமயத்தில், ஒரு பிராம்மண விருந்தினர் எங்கிருந்தோ வந்து

சேர்ந்தார். விருந்தினரைக் கண்டதும் அவர்கள் எல்லோரும் தம் பசியை மறந்து அவரை அன்புடன் வரவேற்று அமர்த்தி, முகமன் கூறினுர்கள் :

சுசய: ஸக்தவச்சேமே நியமோபார்ஜிதா: ப்ரபோ ।
ப்ரதிக்ருஹ்ணீஷ்வ பத்ரம் தே மயா தத்தா த்விஜர்ஷப ॥
(ம. பா. அச்வ. 90, 39)

'நீவிர் தெய்வம் வந்ததுபோல் எங்களை நாடி வந்ததற்கு உமக்கு வணக்கம். மிகவும் நியாயமான முறையில் தேடிக்கொணர்ந்த தானியத்தை அரைத்துத் தயாரித்த மாவு இதோ இருக்கிறது. இதை தாங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். இதை உண்டு பசியாறுங்கள்' என்று கேட்டுக்கொண்டார்கள்.



விருந்தினனுக்கு அவர்களத்தனைப்பேரும் பல நாட்களாகப் பட்டினி என்று தெரியாது. இதனுல் அவர் மகிழ்ச்சியுடன் பிராம்மணன் அளித்ததைப் பெற்று உண்டார். ஆனுல் அவர் பசிக்கு அது போதவே இல்லை.

शुचयः सक्तवश्चेमे नियमोपार्जिताः प्रभो ।
प्रतिगृह्णीष्व भद्रं ते मया दत्ता द्विजर्षभ ॥

இன்னும் கிடைத்தாலாகாதா என்று அவர் இங்கு மங்கும் பார்ப்பதை அவர் மனைவி கண்டு தனக்கென வைத்திருந்த மாவையும் கொணர்ந்து அவர் கலத்திலிட்டு உண்ணுமாறு வேண்டிக் கொண்டாள். அதை உண்ட பிறகும் வந்தவர் பசி தீர்ந்த பாடில்லை. இதை அறிந்த பிராம்மணரின் மகன் தனக்கென வைத்திருந்த மாவையும் கொண்டு வந்து விருந்தினரிடம் சமர்ப்பித்தான். அதை உண்ட பிறகும் வந்தவருக்கு பசி தீரவில்லை என்று தெரியவே மருமகளும் தன் பங்குக்காக இருந்த மாவைக் கொணர்ந்து தன் மாமன்முன் வைத்து, 'விருந்தினருக்கு இதையும் அளியுங்கள்' என்றாள். அதையும் உண்டான பிறகுதான் வந்தவர் பசி ஒருவாறு தீர்ந்தது என்பதற்கு அறிகுறியாக ஏப்பம் விட்டார்.

இவ்வாறு அழையா விருந்தினராக அந்த ஏழை பிராம்மணன் வீட்டிற்கு வந்திருந்தவர் வேறு யாருமல்ல, தர்மராஜனேதான். அவர் பிராம்மணனைப் பரிசோதிப்பதற்காகவே வந்திருந்தார். பிராம்மணன் செய்த மிகவும் சிறந்த தானத்தினால் பெரிதும் மகிழ்ந்த அவர்,

சர்வமேதத்தி யஸ்மாத் தே தத்தம் சுத்தேன சேதஸா।
க்ருச்ரகாலே தத: ஸ்வர்கோ விஜித: கர்மணா த்வயா॥
(ம. பா. அச்வ. 90, 89½)

ஏ பிராம்மணா, வயிற்றுக்கு உணவில்லாமையால் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும் இந்த சமயத்திலும் நீயும் உன் குடும்பத்தார் அத்தனை பேரும் தம்மைப்பற்றி எண்ணாமல் உங்களிடம் இருந்ததை அப்படியே எடுத்து எனக்களித்து விட்டமையால் உனக்கு இங்கேயே சொர்க்க லோகம் கிடைத்துவிட்டது. நீ உன் குடும்பத்தோடு சொர்க்கம் சேருவாய்' என்று கூறியருளினார்.

सर्वमेतद्धि यस्मात् ते दत्तं शुद्धेन चेतसा।
कृच्छ्रकाले ततः स्वर्गो विजितः कर्मणा त्वया॥

க்ஷுதா நிர்ணுததி ப்ரஜ்ஞாம் தர்மபுத்திம் வ்யபோஹதி ।
க்ஷுதாபரிகதஜ்ஞானோ த்ருதிம் த்யஜதி சைவ ஹ ।
புபுக்ஷாம் ஜயதே யஸ்து ஸ ஸ்வர்கம் ஜயதே த்ருவம் ॥
(ம. பா. அச்வ. 90, 90-1)

மனிதனுக்குப் பசி வந்துவிட்டால் அவன் அறிவே அழிந்துபோகும். அவனுக்கு தர்மம், அதர்மம் என்பதே தெரியாது போய்விடும். அந்நிலையில் மனிதன் தன் தைரியம் முழுவதையும் இழந்துவிடுவான். ஆகையால் பசியை வென்றவன் நிச்சயமாய் நேரே சுவர்க்கம் சேருவான்.

ரந்திதேவோ ஹி ந்ருபதிரபः ப்ராதாதகிஞ்சனः ।
சுத்தேன மனஸா விப்ர நாகப்ருஷ்டம் ததோ கதः ॥
(ம. பா. அச்வ. 90, 97)

தெய்வம்போல் உள்ள அந்தணரே, ரந்திதேவன் என்ற அரசனிடம் கொடுப்பதற்கு எதுவும் இல்லாத போது தூய உள்ளத்துடன் தன்னிடமிருந்த நீரை அளித்தான். இதனாலேயே அவனுக்கு சுவர்க்கம் கிடைத்துவிட்டது.

ந தர்மः ப்ரீயதே தாத தானைர்தத்தைர்மஹாபலைः ।
ந்யாயலப்தைர்யதா ஸூக்ஷ்மைः ச்ரத்தாபூதைः ஸ துஷ்யதி ॥
(ம. பா. அச்வ. 90, 98)

क्षुधा निर्णुदति प्रज्ञां धर्मबुद्धिं व्यपोहति ।
क्षुधापरिगतज्ञानो धृतिं त्यजति चैव ह ।
बुभुक्षां जयते यस्तु स स्वर्गं जयते ध्रुवम् ॥

रन्तिदेवो हि नृपतिरपः प्रादादकिञ्चनः ।
शुद्धेन मनसा विप्र नाकपृष्ठं ततो गतः ॥

न धर्मः प्रीयते तात दानैर्दत्तैर्महाफलैः ।
न्यायलब्धैर्यथा सूक्ष्मैः श्रद्धापूतैः स तुष्यति ॥

ஏ மகனே, தீய வழியில் பெறப்பட்ட பணத்தைக் கொண்டு செய்யும் பெரிய பெரிய தானத்தைவிட நீதி முறையினின்று வழுவாது தேடிய பொருளை பக்தி சிரத்தையுடன் தானம் அளிக்கையில் தர்ம தேவதை பெருமகிழ்ச்சியுறுகிறது.

ந ராஜஸூயைர்பஹுபிரிஷ்ட்வா விபுலதக்ஷிணை: ।
ந சாச்வமேதைர்பஹுபி: பலம் ஸமமிதம் தவ ।
ஸக்துப்ரஸ்தேன விஜிதோ ப்ரஹ்மலோகஸ்த்வயாக்ஷய: ॥
(ம. பா. அச்வ. 90, 103-4)

'நீ இந்த தானத்தினால் பெற்ற பயன் மிகுதியாகப் பொன்னையும், பொருளையும் தானமளித்து இயற்றப்பட்ட அசுவமேதம், ராஜசூயம் போன்ற பெருவேள்விகளினால் பெறக்கூடியதைவிட எவ்வளவோ உயர்ந்தது. இரண்டு ஆழாக்கு மாவை தானமளித்து நீ என்றும் நிலைத்திருக்கும் மோட்சத்தைப் பெற்று விட்டாய்' என்று கூறினார்.

மேலும் தொடர்ந்து, கீரி 'அந்தக் குடும்பம் முழுதும் விமானத்திலமர்ந்து சுவர்க்கம் நோக்கிச் சென்றபின் அது வரையில் ஒரு வளையில் ஒளிந்து கொண்டிருந்த நான் மெதுவாக வெளிவந்து அந்த விருந்தினர் உணவு கொண்டபின் வாய் கழுவியதனால் சேருகியிருந்த இடத்திற்குப் போய் விழுந்து புரண்டேன். அதன் விளைவாக என் தலையும் உடலில் ஒரு பகுதியும் பொன் மயமாக மாறிவிட்டது. அதன் பிறகு இங்கே யுதிஷ்டிர மகாராஜன் பெரிய வேள்வி நடத்துவதாகக் கேள்விப் பட்டேன். இங்கும் வந்து விருந்தினர்கள் உண்ட இடத்தில் கிடந்து புரண்டால் என் உடல் முழுதும்

न राजसूयैर्बहुभिरिष्ट्वा विपुलदक्षिणै: ।
न चाश्वमेधैर्बहुभि: फलं समिदं तव ।
सक्तुप्रस्थेन विजितोब्रह्मलोकस्त्वयाक्षय: ॥

பொன்னாகி விடும் என்று எண்ணினேன். ஆனால் அவ்வாறு ஒன்றும் ஆகவில்லை. இதனால்தான் அந்த ஏழைப் பிராம்மணன் செய்த மாவு தானத்திற்கு இது ஈடாகாது என்கிறேன்' என்றது.

இவ்வாறு அது சொல்லி முடித்ததும் பார்த்தால் அங்கே கீரியையே காணவில்லை. அது மாயமாய் மறைந்து விட்டது.

அத்ரோஹ: ஸர்வபூதேஷு ஸந்தோஷ: சீலமார்ஜவம் ।
தபோ தமச்ச ஸத்யம் ச ப்ரதானம் சேதி ஸம்மதம் ।

(ம. பா. அச்வ. 90, 120)

எந்த உயிரிடமும் பகை பாராட்டாமை, மன நிறைவோடிருத்தல், சீலத்தைக் கண்ணேபோல் காத்தல், கபடமின்மை, தவம் இயற்றுதல், மனத்தையும் இந்திரியங்களையும் கட்டுதல், உண்மையே பேசுதல், தன்னிடமிருப்பதை இல்லாதவர்களுக்கு தானம் அளித்தல் என்ற இந்த குணங்களில் ஒவ்வொன்றும் பெரிய பெரிய வேள்விகளுக்கு சமமாகும்.

अद्रोहः सर्वभूतेषु सन्तोषः शीलमार्जवम् ।
तपो दमश्च सत्यं च प्रदानं चेति सम्मतम् ॥

நான்காம் அத்தியாயம்

தரிசனங்கள்

ஹிந்து மதத்தின் தரிசனம் அல்லது தத்துவங்களை அறிவதற்கு தரிசன சாஸ்திரங்களைப் படித்தல் அவசிய மாகும். தரிசன சாஸ்திரங்கள் ஆறு. அவையாவன:

(1) நியாயம்	(4) யோகம்
(2) வைசேஷிகம்	(5) மீமாம்சை
(3) சாங்கியம்	(6) வேதாந்தம்

இந்த தரிசனங்களில் பிரகிருதி, புருஷன், ஜீவன், ஆத்மா, ஈசுவரன், பிரம்மம் முதலியவை பற்றிய ஆழ்ந்த தத்துவங்கள் நுணுக்கமாய் ஆராயப்பட்டு இருக்கின்றன.

தர்மம் என்பது யாது? (1)

அதாதோ தர்மஜிஜ்ஞாஸா ।

(மீமாம்ஸா தரிசனம் (1, 1, 1)

ஜைமினி என்ற மகரிஷி வேதம் ஓதியான பின் வேதம் ஓதுவதன் நேரிடையான பயன் அதன் பொருளை அறிதலாகையால் ‘ தர்மம் அல்லது வேதத்தின் பொருளை நாம் இப்போது ஆராய்வோம் ’ என்கிறார்.

சோதனு லக்ஷணோऽர்த்தோ தர்ம:॥ (மீ. த. 1, 1, 2)

வேதத்தினால் விளக்கப்பட்டிருப்பதும், இம்மையிலும் மறுமையிலும் மேன்மை எய்துதலையே குறிக்கோளாய்க்

अथातो धर्मजिज्ञासा ।

चोदना लक्षणोऽर्थो धर्मः ॥

கொண்டுள்ள ஒவ்வொரு மனிதனும் விரும்புவதும் எதுவோ அதுவே தர்மம்.

யதோऽப்யுதய நி: ச்ரேயஸஸித்தி: ஸ தர்ம:।

(வைசேஷிக த. 1, 1, 2)

இந்த உலகில் மேம்பாடும், பிறகு மோட்சமும் எதனுல் எய்தப்படுமோ அதன் பெயரே தர்மம் என்பது.

முக்திக்கு உதவுவது யோகம்: (2)

ஸமாதிவிசேஷாப்யாஸாத்।

(நியாய தரிசனம் 4, 2, 38)

சிறப்பான சமாதியைப் பயிற்சி செய்வதனுல் தத்துவ ஞானம் உண்டாகிறது.

பூர்வக்ருதபலானுபந்தாத்ததுத்பத்தி:।

(நி. த. 4, 2, 41)

முன் பிறவியில் பெறப்பட்ட தத்துவ ஞானத்தினுலும், சிறப்பான தர்மம் செய்து பெற்ற பயனின் விளைவாகவும் சமாதி நிலை தோன்றும்.

அரண்யகுஹாபுலிநாதிஷு யோகாப்யாஸோபதேச:।

(நி. த. 4, 2, 42)

காட்டிலும் மலைக்குகையிலும் ஆற்றின் கரை முதலிய இடங்களிலும் சென்று யோகப் பயிற்சி செய்யுமாறு உபதேசிக்கப் பட்டிருக்கிறது.

ததர்த்தம் யமநியமாப்யாமாத்மஸம்ஸ்காரோ
யோகாச்சாத்யாத்மவித்யுபாயே:।

(நி. த. 4, 2, 46)

यतोऽभ्युदयनिःश्रेयससिद्धिः स धर्मः॥

समाधिविशेषाभ्यासात्।

पूर्वकृतफलानुबन्धात्तदुत्पत्तिः।

अरण्यगुहापुलिनादिषु योगाभ्यासोपदेशः।

तदर्थं यमनियमाभ्यामात्मसंस्कारो
योगाच्चाध्यात्मविध्युपायैः।

முக்தி பெறும் பொருட்டு யம நியமங்களினுல் ஆன்மாவைத் திருத்தி நல்ல சம்ஸ்காரங்கள் பெறச் செய்ய வேண்டும். யோக சாஸ்திரத்தில் தவம், பிராணுயாமம், பிரத்யாஹாரம், தியானம், தாரணை முதலிய எந்த ஆன்மீகப் பயிற்சி முறைகள் விதிக்கப்பட்டிருக்கின்றனவோ அவைகளைச் செய்து பழகவேண்டும்.

யோகம் என்பது யாது? (3)

யோகச்சித்தவ்ருத்திநிரோத: ॥

(யோக தரிசனம் 1, 2)

யோகம் என்பது சித்தத்தின் போக்கைக் கட்டுப்படுத்துதல்; அதாவது மனத்தில் எழும் எண்ணங்களை அடக்கியாளுதல்.

ததா த்ரஷ்டு: ஸ்வரூபேऽவஸ்தானம் ।

(யோ. த. 1, 3)

சித்த விருத்திகளை அடக்குவதனுல் திரஷ்டா அல்லது பார்ப்பவன் தன் சொரூபத்தில் நிலைநிற்கிருன்.

கிரியா யோகம்:

தப:ஸ்வாத்யாயேச்வரப்ரணிதானுனி க்ரியாயோக:।

(யோ. த. 2, 1)

கிரியா யோகத்திற்கு மூன்று சாதனங்கள் அல்லது வழிகள் உண்டு. அவை தவம், நூல்களை ஓதுதல், ஈசுவரப் பிரணிதானம் அல்லது கடவுளை வழிபடுதல் என்பன.

योगश्चित्तवृत्तिनिरोधः ।

तदा द्रष्टुः स्वरूपेऽवस्थानम् ।

तपःस्वाध्यायेश्वरप्रणिधानानि क्रियायोगः ।

யோகத்தின் எட்டு அங்கங்கள் :

யமநியமாஸனப்ராணாயாமப்ரத்யாஹார-
தாரணாத்யானஸமாதயோऽஷ்டாவங்கானி ।
(யோ. ஸ. 2, 29)

யோகத்தின் அங்கங்கள் எட்டு. அவை யமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாஹாரம், தாரணை, தியானம், சமாதி என்பவை.

அஹிம்ஸாஸத்யாஸ்தேயப்ரஹ்மசர்யாபரிக்ரஹா யமாः ।
(யோ. ஸ. 2, 30)

யமம் ஐந்து. அவை: அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம் (கள்ளாமை) பிரம்மசரியம், அபரிக்ரகம் (வெளவாமை) என்பவை.

சௌசஸந்தோஷதபः
ஸ்வாத்யாயேச்வரப்ரணிதானானி நியமாः ॥

நியமங்கள் ஐந்து. அவை: சௌசம், சந்தோஷம் (திருப்தி), தவம், ஸ்வாத்யாயம் (நூல்களை ஓதுதல்), ஈசுவர பிரணிதானம் (கடவுளை வழிபடுதல்) என்பவையாகும்.

அஹிம்சையின் வெற்றி :

அஹிம்ஸாப்ரதிஷ்டாயாம் தத்ஸன்னிதௌ வைரத்யாகः ।
(யோ. ஸ. 2, 35)

ஒருவனுக்கு அஹிம்சை கைவந்துவிட்டதென்றால் அவனை அணுகும் கொடிய பகைவனும் தன் பகைமையை மறந்து போவான்.

यमनियमासनप्राणायामप्रत्याहार-
धारणाध्यानसमाधयोऽष्टावङ्गानि ॥

अहिंसासत्यास्तेयब्रह्मचर्यापरिग्रहा यमाः ।

शौचसन्तोषतपःस्वाध्यायेश्वरप्रणिधानानि नियमाः ॥

अहिंसाप्रतिष्ठायां तत्सन्निधौ वैरत्यागः ।

பிரம்ம ஜிஜ்ஞாசை (பிரம்மத்தை அறிய வேட்கை) : (4)

அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா ।
[வேதாந்த தரிசனம் (பிரம்ம சூத்திரம்) 1, 1, 1]

இனி இங்கிருந்து பிரம்மத்தைப் பற்றி ஆராயத் தொடங்குகிறோம்.

ஜன்மாத்யஸ்ய யத:।
(பிரம்ம சூத்திரம் 1, 1, 2)

இந்த உலகம் எதிலிருந்து பிறந்து வளருகிறதோ அதுவேதான் பிரம்மம். உலகின் தோற்றம், அது நிலைத்து இருப்பது, பிறகு அழிந்து போவது என்ற



எல்லாவற்றையும் நடத்தும் சக்தியே பிரம்மம் எனப் படுவது.

ந ஸ்தானதோऽபி பரஸ்யோபயலிங்கம் ஸர்வத்ர ஹி ।
(பி. சூ. 3, 2, 11)

अथातो ब्रह्मजिज्ञासा ।

जन्माद्यस्य यतः ।

न स्थानतोऽपि परस्योभयलिङ्गं सर्वत्र हि ।

பரம்பொருளான பரமாத்மாவிடம் குறையெதுவும் கிடையாது. அது குறைபாடு எதுவும் அற்றும் எல்லா குணங்களும் பொருந்தியும் விளங்குவது.

பிரம்ம ஞானம் பெறுதல் :

வித்யைவ து நிர்தாரணாத் ।

(பி. சூ. 3, 3, 47)

சுருதி அல்லது வேதத்தில் அந்த பரப்பிரம்மத்தை அறிந்து கொண்டால்தான் முக்தி கிடைக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பிரம்ம வித்தையே முக்திக்குக் காரணமாயிருப்பது, உதவுவது.

புருஷார்த்தோऽதச்சப்தாதிதி பாதராயண:।

(பி. சூ. 3, 4, 1)

பிரம்ம ஞானத்தினுல் பரப்பிரம்மம் என்ற புருஷார்த்தம் பெறப்படும் என்று பாதராயண வியாசர் கூறியிருக்கிருர்.

சாதனை :

சமதமாத்யுபேத: ஸ்யாத்ததாபி து தத்விதேஸ்ததங்கதயா தேஷாமவச்யானுஷ்டேயத்வாத் ।

(பி. சூ. 3, 4, 27)

பிற கர்மங்கள் அவ்வளவு தேவையில்லையாயினும் சாதகனிடம் சமம், தமம், திதிக்ஷை முதலிய குணங்கள் இருந்தே ஆகவேண்டும். இவை பிரம்ம வித்தையின் அங்கங்களாகும். இவைகளைத் தவருமல் கடைபிடித்தே தீரவேண்டும்.

विद्यैव तु निर्धारणात् ।

पुरुषार्थोऽतश्शब्दादिति बादरायणः ।

शमदमाद्युपेतः स्यात्तथापि तु तद्विधेस्तदङ्गतया तेषामवश्यानुष्ठेयत्वात् ।

श्रीकृष्णदत्त भट्ट कृत

"वैदिक धर्म क्या कहता है?" का

(दूसरा भाग)

तमिल रूपान्तर

१-ला. सं. सेप. '६७ } सर्वोदय प्रचुरालयम्, तंजावूर { मूल्य रु. १

உலகச் சமயங்கள்

				ரூ.	பை.
1.	பௌத்தம்		...	0	80
2.	சமணம்		...	0	80
3.	இஸ்லாம்		...	1	00
4.	கிறிஸ்துவம்		...	0	80
5.	சிக்கியம்		...	0	80
6.	பார்ஸி சமயம்		...	1	00
7.	யூத சமயம்		...	1	00
8.	சீன சமயங்கள்		...	1	00
9.	ஹிந்து மதம் :	1. வேதங்கள்	...	1	00
10.	,,	2. இதிஹாஸங்கள்	...	1	00
11.	,,	3. புராணங்கள்	...	1	00

சர்வோதயப் பிரசுராலயம்
தஞ்சாவூர்